
# கனவுத் தாரகை



திக்குவல்லை கமால்

# கனவுத் தாரகை

திக்குவல்லை கமால்

வெளியீடு

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி,
செத்திரிபாய,
பத்தரமுல்ல

2013- திறந்த கையெழுத்துப் பிரதியாக்கப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வெற்றிப் படைப்பு இது. இதன் உள்ளடக்கம் ஆசிரியரின் கருத்தேயன்றி, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கருத்துக்கள் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

கனவுத் தாரகை
(சிறுகதை)

திக்குவல்லை கமால்

முதற் பதிப்பு: டிசம்பர் 2013

ISBN: 978-955-0353-38-5

வெளியீடு:
கலாசார அலுவல்கள் திணைக்களம்

அச்சகம்:
நெழும் பிரின்டர்ஸ்
ராகம.

# கனவுத் தாரகை

சமர்ப்பணம்

'மல்லிகை' ஆசிரியர்
**டொமினிக் ஜீவா**
அவர்களுக்கு.....

பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

# படைப்பிலக்கியத்தில் ஈடுபடுவது வாழ்வின் பேரின்பம்.

நாவல், சிறுகதை, கவிதை என்பன இலக்கியப் பெறுமானத்தை உச்ச நிலைக்குக் கொண்டு செல்கின்ற மூன்று விடயங்களாகும். இலக்கியப் படைப்பென்ற வகையில் இம்மூன்றும் இலக்கியத்தை ஒரு பாடமாகப் பயில்கின்ற மாணவர் மத்தியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சமூக மயமாக்கப்பட்டுள்ள மக்கள் இலக்கியமான இம்மூன்று வகைகளும் தனிப்பட்ட அபிமானத்திற்கும், இரசிகத் தன்மைக்கும் ஏற்ப உபயோகத்துக்குள்ளா கின்றன. சமூக அனுபவங்கள் ஒன்றையோ பலவற்றையோ நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் என்போர் வாசகர் முன் வைக்கின்றவர்களாவர்.

சில சந்தர்ப்பங்களில் ஓர் இலக்கியவாதி இம்மூன்று துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பர். இத்தகைய இலக்கியச் சூழலில் நாவல், சிறுகதை, கவிதை படைப்பாக்கத்தில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பதோடு, அவற்றை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டி நடாத்தி, வெற்றிப் படைப்புக்களை அச்சிட்டு வெளியிடும் செயற்திட்டத்தின் ஓர் அறுவடையே **கனவுத்தாரகை** என்ற இந்த சிறுகதை நூல்.

அகில இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற பிரதிகள், பிரபல இலக்கியவாதிகளைக் கொண்ட குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வெற்றிப் படைப்பான இந்த சிறுகதைத் தொகுப்பு **திக்குவல்லை கமால** அவர்களின் படைப்பாற்றலை பிரபல்யப்படுத்துகிறது. நூலாசிரியரின் உயர்ந்த வெற்றிப்

படைப்பாற்றலை நான் இதயபூர்வமாக வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மேலும் இந்த இலக்கியவாதிகளை ஊக்கமூட்டி, ஆற்றலை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்குவதற்கு வழிகாட்டிய கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ரீ.பீ. ஏகநாயக அவர்களையும், கலாசார கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. வஸந்த ஏகநாயக அவர்களையும், செயற்குழுவினரையும் நன்றியுடன் ஞாபகமூட்டுகிறேன்.

இலக்கியத்துறையை வளப்படுத்தும் நோக்கில் ஆக்கத்துறையில் ஈடுபடும் இந்த இலக்கியவாதிகள் மென்மேலும் தைரியமும் வெற்றியும் பெறப் பிரார்த்திக்கிறேன்.

விஜித் கனுகல
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள்

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி, செத்திரிபாய,
பத்தரமுல்ல.
திணைக்களம்
2013.12.20

# திறவுகோல்

தாக்கமான விடயங்களைச் சொல்வதற்கு சிறுகதை பெரிதும் கைகொடுக்கிறது.

கிராமிய மண்வாசனை அதற்கு மேலும் மெருகூட்டுகிறது.

சாதாரண மனிதர்களே எனது கதாநாயகர்கள். அவர்களது பிரச்சினைகளே எனது கதாவஸ்துக்கள்.

அவ்வப்போது எழுதிய சில சிறுகதைகளை இதில் தொகுத்தபோது, 'கனவுத் தாரகை' மகுடம் சூடிக் கொண்டது.

ஏற்கனவே கோடையும் வரம்புகளை உடைக்கும் (1984), குருட்டு வெளிச்சம் (1993), விடுதலை (1996), விடை பிழைத்த கணக்கு (1996), புதிய பாதை (1997), வரண்டு போன மேகங்கள் (1999), நோன்புக் கஞ்சி (2007), முட்டைக் கோப்பி (2010) ஆகிய தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம், திறந்த சிறுகதைப் பிரதியாக்கப் போட்டி மூலமாக இதனைத் தெரிவு செய்து வெளியிடுகிறது.

கைகொடுத்ததோர்க்கு இதயபீடத்தில் இருப்பிடமுண்டு.

இலக்கிய தாகமே இமயதாகம்.

திக்குவல்லை கமால்
2013.12.10

**dickwellekamal@gmail.com**
**0716386955, 0382292118**

உள்ளே...


| | |
|---|---|
| ● அகதி அந்தஸ்து | 1 |
| ● வரவேற்புப் பாடல் | 7 |
| ● தங்கை | 14 |
| ● கனவுத் தாரகை | 19 |
| ● அகமுகம் | 30 |
| ● இடைக்காலம் | 40 |
| ● உரிமைப் போராட்டம் | 45 |
| ● சைக்கிள் | 51 |
| ● விடிவு | 59 |
| ● ஓய்வூதியம் | 68 |

## அகதி அந்தஸ்து

எப்படியும் மூன்று மாதங்கள் கடந்திருக்கும்.

முற்றத்தில் காலடிவைத்ததுமே அந்த நினைவுதான் மனதைக் கிளறிக்கொண்டு வெளிவந்தது.

அங்குமிங்கும் கழுத்தைச் சுழற்றிச் சுழற்றி நான் பார்த்த பார்வையை யாரும் கண்டிருந்தால், அன்றுதான் முதற்தடவையாக வந்திருப்பதாக எண்ணியிருப்பார்கள்.

அப்படியொன்றுமில்லை. வருடக் கணக்காக வந்தபோகும் இடம்தான். அங்குவந்து கொஞ்சநேரம் அமர்ந்திருந்தாலே மனதுக்குள் சுகம்தான்.

அந்த சுகத்தை அனுபவிப்பதைவிட எனது தேடல் முந்திக் கொண்டு நின்றது.

அது பர்ளான தொழுகைக்குரிய நேரமல்லாததால் சனம் அப்படி அலைமோதவில்லை. கண்களைச் சுழற்றியே எண்ணிப் பார்த்துவிடலாம். வழமைபோல் மோமியார் ஹவுழ் பக்கமாக ஏதோ செய்துகொண்டிருந்தார்.

பள்ளிவாசல் எல்லைக்குள் உள்ள அந்த ஒரு சுவர் பிரிக்கும் இரண்டு சின்னக் கடைகளில் ஒன்று மாத்திரமே திறந்திருந்தது. அடுத்த கடைக்கதவில் சற்றே பெரிய ஆமைப்பூட்டொன்று தொங்கியது.

கடையின் கொள்ளளவு எப்படியிருந்தாலும் அவரை முதலாளியென்று சொல்லாவிட்டால் சரியில்லை. என்னதான் சொன்னாலும் அவர் என்னை இனம் கண்டுகொள்ளமாட்டார்தான்.

நிலைமையை நான் ஊகித்துக் கொண்டேன். இனி வந்த வேலையைப் பார்க்கத் தொடங்கினேன்.

முன்தேவையை முடித்துக்கொண்டு நீரை அள்ளியள்ளி வுழு செய்தபோது, அது சிரம பரிகாரமாகவும் அமைந்து மனதுக்குள் சுகானுபவம் பரவிச்சென்றது.

மூன்று மாதங்களுக்கு முன்பு இப்படிப்பட்டதொரு வேளையில் தொழுதுகொண்டிருக்கும் போது, சண்டையாக மூண்டுவரும் பலத்த வாக்குவாதம் வெளியே எழுந்தது.

வந்து பார்த்தேன். அவர்கள் இருவரையும் தவிர வேறு எவருமே அங்கில்லை. இருவருமே குட்டி முதலாளிமார்கள்தான்.

அடுத்தடுத்து மிக ஒற்றுமையாக ஒட்டிநின்ற கடைகளின் சொந்தக்காரர்கள். உள்ளே புகைந்துபுகைந்திருந்த வியாபாராப் போட்டி சட்டென்று நெருப்பெடுத்துக் கொழுந்து விட்டதுபோன்ற நிலை ஏற்பட்டிருக்கவேண்டும்.

"நீ செய்த ஜாதியள் எனக்குத் தெரீம்டா" ஒருவர்.

"ஓ நீ நல்லமனிசன்.... ஒன்னப்பத்தி எனக்கும் தெரீம்....." இது அடுத்தவர்.

இருவரது குரலும் உச்சஸ்தாயியிலேயே வெளிப்பட்டன. இரண்டு முகங்களும் கோபத்தால் மிகவும் அகோரமான வடிவம் பெற்றிருந்தன.

ஒரு கடையில் பயான் ஸீடீக்கள், சில புத்தகங்கள், கிதாபுகள் காணப்பட்டன. அடுத்த கடையில் மிஸ்வாக்குக் குச்சிகள், ஊதுபத்தி, சாம்பிராணி போன்றவை தூக்கலாகத் தெரிந்தன. இரண்டுமே வித்தியாச வித்தியாசமான பொருட்களாக இருந்தபோதும், இருகடைகளிலுமே அத்தர் வகைகள் பொதுவாகக்

காணப்பட்டன. எவ்வாறாயினும் இந்த முறுகல் நிலைக்கான அடிப்படைக் காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை.

"இதுக்குப் பொறகுசரி ஒழுங்கா நடந்துக்கோ நீ பெரியோரு ஆளல்ல எனக்கு. ஒன்னப்போல எத்தின பேரக் கண்டவன் நான்"

"நான் சரியாத்தான்டா நடக்கிய. நான் ஒத்தனுக்கும் பயப்புடப் போறேமில்ல. உட்டுக்குடுக்கியேமில்ல."

தொப்பி முதலாளி நாற்பத்தைந்து வயது மதிக்கத்தவர். சிவந்த முகம். அதில் ஐம்பதுக்கைம்பது கறுப்பு வெள்ளை தாடி. மற்றும் தொப்பி.... கைபனியன்... ஸாரன்...

சாம்பிராணி முதலாளி சுமார் இருபத்தைந்து வயது இளைஞன். கருகருதாடி. மற்றும் தொப்பி. கைபனியன் ஸாரன்.

பன்னிரண்டு மணிவரை முன்னேற்பாடுகள் செய்துகொண்டு சிவில் உடையில்தான் இருப்பார்கள் போலும். லுஹர் நெருங்கும்போது ஜுப்பாவும் வெள்ளை ஸாரனுமாக சீருடையில் வெளிப்பட்டுவிடுவார்கள்.

"கைகால ஒடச்சிப்போடுவன் படுவா. நாங்க இங்க பொறந்து வளந்த மனிசரு. அன்ன அத நெனச்சிக்கோ...." தொப்பி மீண்டும் சீறினார்.

"கைகால ஒடக்கியத்தப் பாப்பம். அதுக்கு முந்தி ஒன்ட கைகால் ஒடயும். பெரிய சண்டியனென்ட நெனப்பா ஒனக்கு"- சாம்பிராணி விட்டுக்கொடுக்கவில்லை.

குத்துச் சண்டையில் இறங்குவதற்கு இருவரும் சமவயதோ சமபலமோ கொண்டவர்களல்ல. அதனால் பெரும்பாலும் வாய்ச்சண்டையோடு கேம் முடிந்துவிடுமென்றுதான் எதிர்பார்த்தேன்.

அதற்கிடையில் எங்கோவிருந்து பழைய தும்புத் தடியொன்றைத் தூக்கிக் கொண்டுவந்தார் தொப்பி. ஏதோ தயார்நிலையில் வைத்திருந்ததுபோல் கையடக்க அளவான தடித்த பலகைத் துண்டொன்றைக் கையிலெடுத்தான் சாம்பிராணி.

இருவருமே ஆயுதபாணிகளாக களமிறங்கத் தயார் நிலையிலிருந்தனர்.

தொப்பி தும்புத்தடியால் ஒரு அடிஅடித்தாரென்றால், அவனுக்கு வலித்தாலும் வலிக்காவிட்டாலும் தும்புத்தடி உடைந்துபோவது நிச்சயம். ஆனால் சாம்பிராணி தன்கையிலுள்ள பலகையால் தொப்பிக்கு அடித்தானென்றால் தொப்பியின் மண்டை பிளப்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

எனக்கு அவர்கள் இருவரையும் யார்யாரென்றே தெரியாது. அவர்களுக்கும் என்னை யாரென்றே தெரியாது. இருந்தும் இவ்விடத்தில் வேறு யாருமே இல்லாத நிலையில் நான் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாத கட்டம்.

"ஒன்னக்கொல்லுவன்டா" தொப்பி தும்புத்தடியை உயர்த்தினார்.

"வாடா வா" சாம்பிராணி அறுவது பாகையில் வளைந்து பலகைத் துண்டை ஓங்கினான்.

"இது பள்ளிவாசல் சண்டய நிறுத்துறீங்களா இல்லயா"

எனது சத்தம் அவர்கள் இருவரையும் ஒரு கணம் திடுக்கிடவைத்தது.

நானா இவ்வளவு பெரிதாகச் சத்தமிட்டேன். ஒரு நாளும் நான் இப்படி கத்தினதில்லயே. இருந்தாலும் அதற்குக் கைமேல் பலன்.

இருவருமே தூக்கிய ஆயுதங்களைத் தாழ்த்திக் கொண்டனர். ஒரு பயம் கலந்த மரியாதை எனக்குத்தான்.

"பாருங்க இவன் ரொம்ப மோசம் ஹாஜி"- இது தொப்பியின் முறைப்பாடு.

"நம்பாதேங்கொ. சொல்லி வேலில்ல ஹாஜி"- இது சாம்பிராணியின் எதிர்வினை.

இருவரும் என்னதான் முரண்பட்டுக் கொண்டாலும் இந்த

விஷயத்தில் ஒற்றுமைப்பட்டு ஏகமனமாக எனக்கு ஹாஜிப்பட்டம் தந்துவிட்டார்கள். பக்கத்திலுள்ள இந்தியாவைக்கூட எட்டிப்பார்க்க லாயக்கில்லாதவன் நான்.

அதற்கிடையில் அந்த வாட்டசாட்டமான களிசான்காரன் முன்பக்க கேற்றுக்குள்ளால் புகுந்துவந்தார். அவருக்கு உடனே களநிலை விளங்கிவிட்டது. இது ஒரு தொடர் பிரச்சினையென்பதும் முன்பே அவருக்குத் தெரிந்திருக்கிறதென்பதும் அவரது நடவடிக்கைகளில் வெளிப்பட்டது. எனது குறுகிய நேர ராஜகாரியம் முற்றுப் பெற்றதில் எனக்கு மகிழ்ச்சி.

“மூடுங்க மூடுங்க.... கடய மூடுங்க ரெண்டு பேரும்”

ஏதோ அவர் பள்ளிவாசல் நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்டவர்போல் தெரிந்தது.

நாலைந்து பலகைகள் கொண்ட கடையை மூட நாலைந்து நிமிடங்களுக்கு மேல் எடுக்கவில்லை.

“வாங்க வாங்க ஊட்டுக்குபோவோம்”

திரும்பித் திரும்பிப் பார்த்த தொப்பியை அவர் மெல்ல மெல்ல தள்ளிக் கொண்டு சென்றார்.

வெளியே அவரது பைக் காத்திருந்தது.

அடுத்த காலடியோடு வீதியில் கால்வைக்கும் நிலையில் புலியின் சீற்றத்தோடு திரும்பி.....

“டேய் ஒன்ன இங்க நிக்குடுகியான்டு பாரு...... அகதி நாய்.... தூ”

போராளிகள் பிரிந்துவிட்டனர்.

அந்த இறுதி வார்த்தை என்மனதைக் குத்தி வலிக்கச் செய்தது.

“அகதி நாய்”

“அல்ஹம்துலில்லா” என்றவாறு தொழுகையை முடித்துக்கொண்டு வெளியே வந்தேன்.

சாம்பிராணியின் கடை திறக்கவேயில்லை. வெளியே ஆமைப்பூட்டு தொங்கியது.

தொப்பியின் கடை திறந்திருந்தது. அவரது முகத்தில் சந்தோஷப் பரவல்.

மூன்று மாதங்கள் கடந்தாயிற்று. அவருக்கு என்னைத் தெரியவே தெரியாது. இப்படி எத்தனை பேர் வருகிறார்கள் போகிறார்கள்.

"மலலிகை அத்தர் குப்பியொன்று தாங்க"

எழுபத்தைந்து ரூபா கைமாறியது.

"இந்த அடுத்த கடைக்காரன் எங்க?"

"அவர ஒங்களுக்குத் தெரீமா?"- எனது கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவர் என்னிடம் கேள்வி கேட்டார்.

"தெரியாது இங்க வந்தா பத்தி, சாம்பிராணி கொணுபோற பழக்கம்"

"ஆ..... அப்பிடியா.... நீங்க எந்த இடம்?"

"நான் திக்வெல்ல..."

"அப்பிடியா அப்ப இந்தப் பொகம்"- தாடிக்குள்ளால் சிரித்தார்.

"நான் கேட்டதுக்கு....."

"ஓ..... ஓ.... அவன் கெட்டவன். அவன அனுப்பிட்டாங்க.... அகதி நாயொன்டு"

தொப்பியின் கோபம் இன்னும் தணிந்ததாக இல்லை.

நான் திரும்பி நடந்தேன்.

# வரவேற்புப் பாடல்

மகா வித்தியாலய அதிபர் சங்கீத ஆசிரியரை சந்திப்பதற்காக தேசிய பாடசாலைக்குச் சென்றிருந்தார். ஒரே கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளென்பதால் அதிபர்களிடையே அறிமுகத் தொடர்பிருந்தது.

சங்கீத ஆசிரியர் வரும் வரையில் காரியாலயத்தில் அமர்ந்திருந்த அதிபர், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த தகவல் அட்டைகளில் கண்களை மேயவிட்டார்.

அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கட்டியெழுப்பப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டிடத் திறப்பு விழாவை எதிர்வரும் மாதத்தில் நடாத்துவ தற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நிகழ்ந்தன. பெற்றாரின் உற்சாக த்தை முன் நிலைப்படுத்தி அமைச்சரிடம் ஒப்புதல் பெற்றிருந்தார் கள். அமைச்சர் ஒருவர் வருகை தருவது இதுவே முதற் தடவை என்பதால் சகல மட்டத்திலும் பேரார்வம் பொங்கிப் பிரவகித்தது.

"செலவப் பத்தி யோசிக்க வாண ஸேர். செய்த வேலய பஸிந்தாச் செய்யோம். அப்பதான் இனமொரு வேலக்கிப் பொகேன்டிய"

எஸ்டிஎஸ் முக்கியஸ்தர்களின் ஒட்டுமொத்த அபிப்பிராயமும் இதுதான். பெரும் புள்ளிகளெல்லாம் சம்பந்தப்பட்டிருந்ததால், அதிப ரும் தனது விலாசத்தை நிலைநாட்டிக் கொள்ள அதை நல்ல வாய்ப் பாக அமைத்துக் கொண்டார்.

அவர் புதிய அதிபர் தான். இப்பாடசாலையைப் பொறுப்பேற்று

இன்னும் ஆறுமாதம் கூட ஆகவில்லை. மூன்று வருடங்களாக முயற்சி பண்ணி, விசேட சலுகைகள் வழங்குவதாக மகிழ்ச்சிப்படுத்தி அவரை இறக்குமதி செய்திருந்தார்கள்.

அப்போது சிரித்தபடி குறுந்தாடி ஆசிரியரொருவர் அலுவலகத் திற்கு வந்தார்.

"ஆ இவர் தான் எங்கட சங்கீத ஆசிரியர். ரொம்பக் கெட்டிக்காரர். உங்களுக்குத் தேவயான உதவிய செய்வார்..... இவர் மகா வித்தி யாலய அதிபர்"

தேசிய பாடசாலை அதிபர் இருவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்துவிட்டு, தனது கடமையில் ஆழ்ந்து போனார்.

இருவரும் கைகுலுக்கிக் கொண்ட பின் ஒரு பக்கமாக அமர்ந்து கதைத்தனர்.

"எங்க ஸ்கூலுக்கு மினிஸ்டர் வாரார். உங்க ஹெல்ப் தேவ. பிள்ளைகளுக்கு வரவேற்பு பாடலொன்று நீங்க பழக்கித் தரணும்"- அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

"சரி ஸேர்"- அவர் ஒரேயடியாக விருப்பம் தெரிவித்தார்.

தொடர்ந்து சிங்களப் பாடசாலைகளிலேயே கடமையாற்றிக் கொண்டிருந்த பிரியன்த ஸேருக்கு இது ஒரு வித்தியாசமான அனுபவமாக அமையுமென்பதால், எதிர்பார்த்துக் காத்திருந்ததே போன்று உற்சாகமடைந்தார்.

"திங்கள், புதன்.... ரெண்டு மணிக்குப் பிறகு அங்க வாரன் ஸேர்"

"ஆ....... நான் கோல் எடுக்கிறன்"- என்றபடி அவரது கைபேசி இலக்கத்தைக் குறித்துக் கொண்டார்.

காரியம் சாத்தியமான மகிழ்ச்சியோடு அதிபர் அங்கிருந்து விடைபெற்றார்.

❋❋❋❋❋

அதிபரின் அழைப்பையேற்று ஐந்தாம் தர ஆசிரியைகள் ஐவரும் வருகை தந்திருந்தனர். விழா தொடர்பான ஏதோ நடவடிக்கையென் பது அவர்களுக்குத் தெரியாததல்ல.

"சங்கீதா ஸேர் கிழமக்கி ரெண்டுநாள் இங்க வார. புள்ளயளுக்கு வரவேற்பு பாட்டுப் பழக்க. செய்த ஃபங்ஷன் ஒழுங்காச் செய்யோ ணுமேன்"- பிரின்ஸிபல் விளக்கம் சொன்னார்.

"மெய்தானே ஸேர். மினிஸ்டர் வார. கொறபாடில்லாமச் செய்யோ ணுந் தானே. நீங்க வந்தாப் பொறகு எஸ்டிஎஸ் மிச்சம் உசார் ஸேர்"- மர்சூனா டீச்சர் ஐஸ் வைப்பதில் கைதேர்ந்தவரென்பதை அதிபர் தெரிந்து வைத்திருந்தாரோ என்னவோ!

"பெரிய பொம்புளப் புள்ளயள மேடக்கேத்த செலவங்க புரியமில்ல. ம்....... அஞ்சாம் வகுப்புப் புள்ளயளென்டா கணக்கான ஸைஸ். எங்களுக்கு பதினஞ்சிபேர் போதும். ஒரு வகுப்பால மூனுமூனு பேர் தந்தாச் சரி. ஆ...... புள்ளயப் பத்தித் தெரீந்தானே...... பாடக் கூடிய புள்ளயளப் பாத்தெடுங்கொ"

"ஓ ஸேர் நல்ல நல்ல புள்ளயளீக்கி"- மலீஹா மிஸ் முன்னுக்குப் பாய்ந்தாள்.

விடைபெற்று வகுப்புகளை நோக்கி வந்து கொண்டிருக்கும் போதே, அவர்களது மனம் பிள்ளைகளைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டிருந்தது.

"எல்லாரோடேம் செல்லி கொழப்பிக் கொண்டா எங்களுக்கு கரச்சல். பேசாம பேரியள எழுதிக் குடுக்கோம்"- பொது ஒழுங் கொன்றை ரஸ்மினா டீச்சர் முன்மொழிந்தார்.

"ஓ ஓ....... இல்லாட்டி என்னப் போடுங்கோ என்னப் போடுங்கோன்டு புள்ளயள் கரச்சல் தாரொன்டும்"- இல்முன்நிஸா வழிமொழிந்தார்.

வகுப்பு வேலைகள் அவர்களுக்கோடவில்லை. இன்ரவலுக்கு முன்பு பெயர்ப் பட்டியல் கொடுக்கவும் வேண்டுமே!

தனது வகுப்பில் மூன்று பிள்ளைகளின் பெயர்களை எழுதிய பேகம் டீச்சருக்கு, ஏதோ யோசனையில் இருப்புக் கொள்ளவில்லை. பேனையும் கையுமாக மலீஹா மிஸ்ஸின் வகுப்புக்கோடினார்.

ஏதோ தெரிவுச் சிக்கல் தொடர்பாகத்தான் வருகிறாவென்று அந்த டீச்சருக்கு விளங்கிவிட்டது.

"எனத்தியன் டீச்சர்?"

"ஆ........ எங்கட தங்கச்சீட மகள் ஒங்கட வகுப்பேன். அது தான் கொஞ்சம் நெனவுட்ட வந்த"- என்றார் பேகம் டீச்சர்.

"நல்லகாலம் நெனவூட்டின. ஏன்ட வகுப்பிலயென்டா டீச்சர்மாரட புள்ளயள் ஒத்தாரலுமில்ல. ஸகூல் வேல வெட்டிக்கி ஓடியோடி வார முபீன்ஹாஜீட பேத்தியப் போட்ட. சந்தியடி சபுரான் பெரிய சண்டிய னேன். அவன்ட மகளேம் போட்டுட்ட. மூனாவதா தாரயன் போடி யென்டு யோசிச்சி யோசிச்சி நிக்கச் செல்லேதான் நீங்க வந்த"- ஏதோ பெரியதொரு பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தது போல் சொல் லிவிட்டு, அவருடைய தெரிவை அறிந்து கொள்ள அவாப்பட்டார்.

"எனக்கென்டா ஒரு பிரச்சினேமில்ல. ரஹீமா டீச்சர்டேம் நஸீரா டீச்சர்டேம் இஸ்திகார் ஸேரடேம் புள்ளயளப் போட்டுட்ட...... ஒத்தரப் போட்டிட்டு ஒத்தர உடேலவேன்"- என்று தனது தெரிவு ஞானத்தைச் சொல்லி வியந்தார்.

தரம் ஐந்து இணைப்பாளரான ஜும்ராத் மிஸ் ஐந்து பேரதும் விருப்பத் தேர்வுகளை ஒன்றாக இணைத்து கவரிலிட்டு ஒட்டி அதிபருக்கு அனுப்பி வைத்தார்.

அடுத்த வகுப்பு ஆசிரியர்களுக்குக் கூட தெரியாத வகையில் இந்த இரகசியத்தைப் பேணிக் கொண்டனர். பிள்ளைகளுக்கும் தெரியப்படுத்தவில்லை.

❋❋❋❋❋

அன்று மூன்றாவது நாளாக வரவேற்புப் பாடல் நடைபெற்றது. பிரியன்த ஸேரின் முகத்தில் மகிழ்ச்சி காணப்படவில்லை.

இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன. பாட்டுக்காரப் பிள்ளைகளில் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை. வார்த்தைகள் வெளிவந்தனவே தவிர, அதற்குரிய உணர்ச்சி பாவமோ, ராக எடுப்போ காணப்படவில்லை.

"ஒவ்வொருவரும் ஓங்களுக்குத் தெரிந்த ஏதாவொரு பாட்டுப் பாடுங்கொ பாப்பம்"- முதல் நாள் வருகை தந்த போது பிள்ளைகளிடம் இவ்வாறு வேண்டிக் கொண்டார் பிரியன்த ஸேர்.

வகுப்பாசிரியைகளும் உதவிக்காக வந்திருந்தனர்.

பிள்ளைகள் பாடினார்கள். பதினைந்து பேரில் ஐந்து பேர்கூட

திருப்தி தரும் தொனியில் பாடவில்லை. அவரது அதிருப்தி டீச்சர்மாரின் முகங்களில் பிரதிபலித்தது.

"வகுப்பில ஜாதியாப் பாடிய புள்ளயள் ஸேர்"- பேகம் டீச்சர் துணிந்து சொன்னார்.

"மெய்யா?"- வியந்து போனார் அவர்.

அவரால் நம்ப முடியவில்லை. ஒருநாளும் இவ்வளவு மோசமாக இருக்க முடியாது. ஐந்து வகுப்பென்றால் சுமார் இருநூறு பிள்ளைகள். அவர்களுக்குள்ளிருந்து குரல்வளம் நிரம்பிய பதினைந்து பேரைத தேடி யெடுப்பதில் எந்தக் கஷ்டமுமில்லையென்பதே அவரது அனுபவம்.

மாலை போட, பன்னீர் தெளிக்க, அத்தர் பூச, பூத்தூவ, கத்தரிக் கோல் கொடுக்க தெரிவு செய்யப்பட்டிருந்த பிள்ளைகளை விட, வரவேற்புப் பாடலுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தனியான மதிப்பு அங்கே நிலவியது. பெற்றார் உற்றாரெல்லாம் பூரித்துப் போயிருந்தனர். எங்களுக்கு இப்படியொரு வாய்ப்பு கிட்டவில்லையே என்று ஏராளமானோர் ஏங்கி நின்றனர்.

"இன்னம் ரெண்டு கிழம இருக்கு. நான் ட்ரய் பண்றன்"- ஆசிரியைகளைச் சமாளித்தார் பிரியன்த ஸேர்.

பயிற்சியை முடித்துக் கொண்டு அதிபரைச் சந்தித்தபோது மாலை நான்கு மணியாகிவிட்டது. தேநீர் பருகிக் கொண்டே கதைக்கத் தொடங்கினர்.

"எப்பிடி பிள்ளையள்?"- அதிபர் விசாரித்தார்.

"ஸெலக்ஷனில் எனக்கென்றா திருப்தி இல்ல ஸேர்! நானே போய் ஸெலக் பண்ணினா நல்லாயிருக்கும்"

பிரியன்த ஸேர் சொன்னவிதம் சுள்ளென்று அவரது மனதைத் தைத்தது. டீச்சர்மார் அப்பிடிச் செய்திருக்கமாட்டார்கள். தற்செய லாக அப்படி நடந்திருந்தாலும் இனி எப்படி மாற்றம் செய்ய முடியும்? பெற்றார்கள் பிரச்சினைக்கு வருவார்களே....... ஒரு கணம் குழம்பிப் போனார் அதிபர். பின்னர் தன்னைச் சமாளித்துக் கொண்டு......

"முதல்லயே செய்திருக்கலாம். இனி மாற்றம் செய்தால் சிக்கல் வரும். தொடங்கின வேலய செய்ய முடியாமல் போகும். எப்படியா வது சமாளிப்போம் ஸேர்"

"சரி..........."

பிரியன்த ஸேருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. கட்டின பெரய அடிக்கத்தானே வேண்டும்.

❁❁❁❁❁

பாடசாலை கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிள்ளைகள், பெற்றார், ஆசிரியர்கள் குதூகலமாக இயங்கிக் கொண்டிருந்தனர். மைதான மேடை விசேட ஏற்பாடுகளுடன் தயார் நிலையிலிருந்தது.

விசேட பாதுகாப்புப் பிரிவினர் நேரகாலத்தோடு வந்து குழுமியிருந்தனர்.

எதிர்பாராத அளவு வந்து குவிந்த பெண்மணிகள் ஒதுக்கப்பட்ட இடத்தில் நெருங்குண்டு தவித்தனர்.

திறக்கப்படவிருந்த புதுமண்டபவாயிலில் ரிபன் கட்டப்பட்டிருந் தது. கத்தரிக்கோல் தட்டுடன் இரண்டு மாணவிகளும் ஓர் ஆசிரியரும் காவல் நின்றனர். முன் கேற்றடியில் மலர்மாலை, பன்னீர் செம்புடன் இன்னொரு குழுவினர்.

பள்ளிவாசல் சந்தியிலிருந்து அமைச்சர், பிரமுகர்கள் ஊர்வல மாக அழைத்துவரப்படவிருந்தனர். சகல வீடுகளிலும் வரவேற்புக் கொடிகளும் இடையிடையே பதாதகைகளும் காணப்பட்டன.

ஊர்ப் பிரமுகர்களால் அழைத்து வரப்படும் விருந்தினரை வரவேற்க அதிபர், ஆசிரியர் குழாம், மாணவர்கள் தயாராக நின்றனர்.

பட்டாசு வெடி பெரிதாகக் கேட்டது. அமைச்சரின் பிரச்சன்னம் உறுதியாகிவிட்டது.

பேன்ட் அணியினர் புதுமண்டபத்திற்கு முன்நின்று இறுதி ஒத்திகை பார்த்தபோது அமைதி ஆட்சிபீடமேறியது.

"இப்பொழுது மந்திரி, பிரதானிகள், அதிபர், ஆசிரியர்களால் வரவேற்கப்படுகின்றனர். அதோ புது மண்டபத்தை நோக்கிச் செல்கின்றனர். மண்டபம் திறந்து வைக்கப்படுகின்றது. இன்னும் சொற்ப வேளையில் மேடையை நோக்கி அழைத்து வரப்படுவார்கள்"

"டும்.....டும்........ டும்"

இன்னியத்துடன் மேடையை நோக்கி நகர்ந்தனர்.

பிரமுகர்கள் மெல்ல மெல்ல மேடையை நெருங்கினர்.

வரவேற்புப் பாடலுக்குரிய மாணவிகள் பிரத்தியேக ஆடையணிந்து மிகுந்த பூரிப்புடன் தயாரகவிருந்தனர்.

"இதோ அமைச்சர் மேடையேறுகிறார்"

கூடாரங்களில் அமர்ந்திருந்தவர்களெல்லாம் எழுந்து நின்று மரியாதை வழங்கினர்.

"அடுத்ததாக வரவேற்புக் கீதம். ஐந்தாம் வகுப்பு மாணவிகள் குழுவினர் வழங்குகின்றனர்"

கவர்ச்சியாக பிள்ளைகள் மேடையேறி நின்றனர்.

பிரியன்த ஸேர் ஓகனில் மெல்லிய முன்னிசையை வாசித்த போது, மேடையை நோக்கி சகல கண்களும் ஒன்று குவிந்தன.

பாடத் தொடங்கிய பிள்ளைகள், தங்களது பார்வையை ஒரே சீராக வைத்திருக்காமல், அங்குமிங்குமாக தங்களது பெற்றோரை........... தெரிந்தவர்களைத் தேடுவதை அவதானித்தபோது, ஸேரின் மண்டையில் முதல் இடி விழுந்தது போலிருந்தது.

பெற்றோர்கள் தங்கள் சகபாடிகளுக்கு விரல் நீட்டி நீட்டி தங்கள் பிள்ளைகளைக் காட்டிக் காட்டி மகிழ்ந்தனர்.

*"லல்ல லலாலலா லாலலா*
*எங்கள் கலையக விழா இதுவே"*

பாடலும் பின்னணி இசையும் ஒன்றாக எழுந்தபோது......

"ஜாதி ஜாதி"- இது சபையோர்.

ராகம்....... தாளம்.....சுருதி...... ஒத்திசை.... எல்லாமே தப்பும் தவறுமாய்.........

இப்படியொரு மோசமான நிகழ்ச்சியை மேடையேற்றிய வரலாறு இதுவரை தனக்கில்லை என்பதை நினைத்தபோது, தன்னுடைய தலையை எங்காவது இடித்து உடைத்துக் கொண்டு சாக வேண்டும் போலிருந்தது பிரியந்த ஸேருக்கு.

# தங்கை....?

"இங்கபாரு.... நீ தாரக் கல்யாணம் செஞ்சாலும் எங்க கலியாணம் செஞ்சாலும் எனக்குப் பிரச்சினில்ல.... அதியல நான் தடுக்கப் போறேமில்ல. ஆனா ஒரு விஷயம் ஒனக்கொரு தங்கச்சி இருக்கியது ஒனக்கு நல்லாத்தெரீம்..... அவளுக்கு மாப்பிள பாக்கியது ஒண்ட பொறுப்பு. அதுக்காக எல்லம் தூக்கி ஒண்ட தலேல வெக்கியென்டு நெனக்காதே. என்னால முடிந்தத நானும் செய்த" அன்று வாப்பா இப்படித்தான் சொன்னார்.

வாப்பா சொன்னதை நானொன்றும் மறுக்கவில்லை. மறுப்பதற்கு எந்த நியாயமும் இருப்பதாக எனக்குப்படவுமில்லை. நான் திருமணம் செய்துகொண்டதன் பின்பு ஆறுதலாகப் பார்த்து தங்கைக்கு செய்து வைக்கலாமென்றுதான் நினைத்திருந்தேன். ஒருவேளை தங்கையின் விஷயத்தை முன்வைத்து அதன் மூலமாக இன்னும் இரண்டொரு வருடத்தை என்னை இழுத்தடிக்க வாப்பா யோசித்தாரோ என்னவோ! எனக்கும் கூட அவசர அவசரமாகத் திருமணமாகிவிட வேண்டுமென்ற இக்கட்டுகள் கூட இருக்கவில்லை. ஆனாலும் அவள்.... ஆமாம் எனது விருப்பத்துக்குரியவள் அன்று சொன்ன வார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலிப்பதுபோலிருக்கிறது.

"இங்க பாருங்க எங்கட நானா வெளிநாட்டிலிருந்து இன்னும் ஆறுமாதத்தில் வாறாராம்.... மூன்றாவது முறையாகத் தான் வரார்... முதலாம் மொற காணி வாங்கின.... இரண்டாம் மொற வந்து

அந்தக் காணீல ஊடு கட்டின..... இந்த மொற எனக்கு கல்யாணம் செஞ்சிவெக்கப்போறதா வாப்பாவுக்கு கோல் பண்ணீக்கார். எங்கட விஷயத்த வாப்பாக்கு தெரீந்தானே.... அதால மாப்பிய தேடிய கஷ்டம் அவருக்கில்ல..."

அவள் சொன்ன இந்த வார்த்தைகள்தான் வேடிக்கையாக இருந்த என்னை இன்பவேதனைக்குள் ஆழ்த்தியது. வாப்பா விடுத்த கட்டுப்பாட்டை காரியசித்தியாக்கும் கைங்கரியத்திலும் என்னை துரிதமாக இயங்கவைத்தது.

யார்யாரையோவெல்லாம் என் தங்கைக்கு மாப்பிள்ளையாக பேசிக்கொள்ள எடைபோட்டுப் பார்த்தேன். ஒன்றிருந்தால் ஒன்றில்லை. எல்லாம் எதிர்பார்ப்பதுபோல் அமையக்கூடிய மாப்பிள்ளை ஒருவரைத் தேடியெடுப்பது அவ்வளவு இலேசானதல்ல என்பதை உணரத் தொடங்கினேன். எப்படியோ என்மனதில் ஓரிருவர் தட்டுப்படவே செய்தார்கள். எனது தொழிற்துறையோடும் தொடர்புடைய நண்பன்தான் இறுதியாக எஞ்சிநின்றான்.

இதற்கிடையில் தங்கையைப் பற்றி நான் ஒன்றும் அலட்டிக்கொள்ளவில்லை. அவள் எனது ஒரே தங்கை என்பதையும் அவள் விருப்பம் என்ன என்பதையெல்லாம் அறிந்துதெளிய என் மனம் இடம்கொடுக்கவேயில்லை. ஏதோ எங்களது ஏற்பாட்டுக்கு அவள் ஆட்படுவாள் என்பதை மாத்திரமே என்னால் எண்ண முடிந்தது. அவள் உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள் என்பதும் படிந்து தானொரு தொழில்பார்க்கவேண்டும்... அதன்மூலம் சமூகத்தின் மத்தியிலே ஒரு அறிவுஜீவியாக திகழவேண்டுமென்று அவள் அவ்வப்போது சொல்வது கூட எனக்கு அடிக்கடி நினைவு வராமலில்லை. என்றாலும் கடமைக்காக ஒருமுறை கேட்டுப்பார்க்கப்போய் அதற்கவள் இணங்காமல் போனால்.... அதன் மூலம் கால இடைவெளி விரிந்து எனது திருமணம் கேள்விக்குறியாக விடுமோ என்று நான் பயப்பட்டதெல்லாம் பொய்யல்ல!

"வாப்பா..... நான் தங்கச்சிக்கு ஒரு மாப்பிள்ள பாத்தீக்கன்.... ஊர்ப் பொடியன்தான்.. மம்மலிகாக்கட மகன் நாஸிம்தான்... யாவாரத்தில மிச்சம் கெட்டிக்காரன்.... எப்பிடிச்சரி கொணுவந்து போட்டு குடும்பத்த காப்பாத்துவான்...."

இப்படித்தான் வாப்பாவிடம் சொன்னபோது அவர் சிரித்துக்கொண்டே மௌனமாகவிருந்தார். கொஞ்சம் தேடல் செய்துவிட்டு அதுபற்றி அபிப்பிராயத்தைத் தெரிவிப்பாரென்று எனக்குத் தெரியாதா என்ன? அதுவரை நான் காத்திருக்கவில்லை. தங்கைக்குத் தேவையான பிடவை- நகைகளைப் படிப்படியாகச் சேகரிப்பதில் என் கவனத்தைச் செலுத்தினேன். கடன்பட்டாவது காரியத்தை அவசரமாக முடித்துவிட வேண்டுமென்பதே எனது இலக்கு. எனது திருமணத்தின்போது என்கைக்கும் ஏதோகிட்டுவதைக் கொண்டு அதனைச் சமாளித்துக் கொள்ளலாமென்று என்மனம் என்னை உற்சாகப்படுத்தியது.

அன்று இவு சாப்பிட்டுவிட்டு படிக்கட்டில் குந்தியிருக்கும்போது வாப்பா என்னை நெருங்கினார். அவர் நெருங்கும்போது கல்யாண விஷயம்தான் என்பது எனக்குப் புரிந்துவிட்டது.

"மகன் நான் எல்லாம் தேடிப்பார்த்தன். எல்லாரும் நல்லாத்தான் செல்லியாங்க.. ஆனா ஒரு கொற.... அது ஒனக்கும் தெரீந்தானே.... பொடியன் கொஞ்சம் குடிக்கியாமே...."

வாப்பா இப்படிச் சொன்னபோது நான் எப்படி மறுப்பது "இந்தக் காலத்தில அப்படியெல்லாம் பாக்கேலுமா வாப்பா.... குடிச்சிட்ட பேசாம ஊட்டுக்குள்ள நிக்கியாங்க.... இதெல்லாம் கணக்கெடுக்க வாண. இப்படியெல்லாம் பாத்தா வாப்பா மாப்பிளயே தேடேலாப் பொகும். அவங்கவங்க குடும்பமானாப் பொறகு செல்லித் திருத்திக் கொண்டாச் சரி" இப்படி நான் ஒரேயடியாக வாப்பாவின் அங்கலாய்ப்பை அகற்றிவிட்டேன்.

அப்போதுதான் சற்றுமே எதிர்பார்க்காதபடி அந்த ஒப்பாரி ஒலித்தது.

"நானா நீங்க எனத்தியன் செய்யப்போற.... எனக்கு கலியாணம் பேசச்செல்லி சென்னா நான். ஒங்களுக்கு வேணுமென்டா நீங் முடிச்சிக்கோங்க... ஒங்கட தேவக்க என்ன பாழ்கிணத்தில தள்ளப்பாக்கிய.... கொஞ்சம் யோசிச்சுப்பாருங்க நானா....." ஆத்திரம் வெடிக்க தங்கச்சி இப்படித்தான் அன்று அழுதாள்.

"இங்கபாரு... இன்டக்கி செஞ்சாலும் நாளக்கி செஞ்சாலும் அத நான்தான் செய்யோணும். வேறொத்தரும் வந்து செய்யப் போறல்ல.... கல்யாண விஷயங்கள சொணக்காம சீக்கிரமாச் செஞ்சிவெக்கிய இரகசியம் ஒனக்கு வெளங்காது. எல்லாம் ஒன்ட நன்மக்கித்தான்" என்னுடைய மனதுக்கும் நாவுக்கும் சம்பந்தம் இருந்ததோ இல்லையோ என்னால் இப்படித்தான் சொல்லமுடிந்தது. வாப்பா யார்பக்கமும் பேசாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார்.

"வாப்பா எனக்கு கல்யாணம் செஞ்சி வெச்சிட்டு ஒங்கட விஷயத்த செய்யச்சென்னது மெய்தான்.... அதுக்காக இவ்வளவு சீக்கிரமாக எவன்ட தலயிலாவது என்னக் கட்டப் பாக்கிய.... ஏன்ட கல்யாணத்தப்பத்தி நான் இன்னும் யோசிக்கவே இல்லநானா.... நான் இன்னும் எவ்வளவோ படிக்கோணும்.... ஏன்ட படிப்பிலயும் மண்ண வாரிக்கொட்டுறீங்க.... ம் இதுக்கு மிச்சம் நான் ஒன்டும் தாருக்கம் செல்லியல்ல. ஒங்களுக்கு சரியென்டா செய்ங்க...."

இப்படிச் சொல்லிவிட்ட உள்ளே போனவள் அதற்குப்பின் கல்யாண விஷயமாக எதுவுமே பேசவில்லை. அவள் மனவேதனை எனக்குப் புரியாமலில்லை. அவளுடைய இலட்சிய எதிர்காலம் இதன்மூலம் தவிடுபொடியாகிப்போவது எனக்கு விளங்காமலுமில்லை. படித்த அவளுக்கு ஒத்துவரக்கூடிய மாப்பிள்ளை அல்ல என்பதும் எனக்குத்தெரியும். ஆனால் என்ன செய்வது.... நான் நானாக இல்லாத ஒரு மனோநிலையில் என் நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக விரும்பியோ விரும்பாமலோ தங்கையின் கழுத்தில் தாலி ஏற்றவேண்டிய தவிர்க்கமுடியாதநிலை.

இதற்கிடையில் எனது விருப்பத்திற்குரிய எதிர்கால மனைவியின் நானா வெளிநாட்டிலிருந்து வந்துவிட்டான் என்ற செய்தி வந்து சேர்ந்தது. ஏற்கனவே சொன்னதற்கு இரண்டுமாதம் முன்கூட்டியே வந்திருந்தது ஒருவேளை மூன்றுமாத விடுறையாக இருக்கக்கூடுமென்று எண்ணிக்கொண்டேன். ஒருவகையில் அப்படி வந்ததும் நல்லதுதான். தங்கைக்கு நகைநட்டு செய்வதில் ஏற்பட்டுள்ள பணப்பிரச்சினைக்கு வடிகாலாகக்கூட அவர் வருகை

அமைந்துவிடுமென்று மகிழ்ந்துபோனேன். பின்பு கூட்டிக் கழித்துக் கொள்ளமுடியும் என்றவகையில் அவள் மூலமாக கொஞ்சம் பணம் பெறலாமா என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோதுதான் அவளிடமிருந்து அந்த அழைப்பும் வந்து சேர்ந்தத.

“இங்க பாருங்கொ... நானா அவசரமா வந்தீக்கார். அவருக்கு அங்க புரமோசன் கெடச்சீக்காம்.... அவசரமா ரெண்டு கிழமேல பொகோணுமாம்.... அதுக்கிடேல அவரும் கல்யாணம் செஞ்சி அவவ கூட்டிக்கொணு பொகப் போறாம்.... எனக்கும் கலியாணம் முடியோணுமாம்”

மனப்பதட்டத்தோடும் வித்தியாசமான தோரணையிலும் அவள் சொன்னதைக் கேட்ட எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. இந்த இருவாரங்களுக்குள் தங்கையின் கல்யாணத்தை எப்படி முடிப்பது... நான் கல்யாணத்திற்கு எப்படித்தயாராவது.... இப்படியெல்லாம் மின்னல்கள் என்மனதிலே மின்னிமறைந்தன.

“....நீங்க நீங்க எனத்தியன் செல்லிய. எனக்கு ஒன்டுமேட வெளங்கல்ல” இப்படிச் சொன்னவாறு பரிதாபமாக அவள் முகத்தைப் பார்த்தேன்.

“ஒங்கட நிலமய நெனச்சி எனக்கு மிச்சம் கவல.... ஆனா என்னால ஒன்டுமே செய்யேல.... நானா எனக்கும் கல்யாணம் பேசி ஒழுங்கு செஞ்சிகொண்டுதான் வந்தீக்கி.... அவரோட வேலசெய்ற ஒருவரத்தான் பேசீக்கார். அவரட தங்கச்சத்தான் நானா முடிக்கப் போற.... நாலுபேரும் ஒன்டா வெளிநாடு போறதுக்கும் இப்பவே வேல செஞ்சிக் கொண்டீக்கார்”

இப்படி அவள்தான் பேசினாளா என்று என்னால நம்பவே முடியவில்லை. என்னால் பேசுவதற்கு வார்த்தைகளே இருக்கவில்லை. திரும்பி நடந்தேன்.... எங்கே நடக்கிறேன் என்பது மாத்திரம் எனக்குத் தெரியவில்லை.

# கனவுத் தாரகை

“ட்றிங்.......ட்றிங்”

“ஹலோ”

“ஆ நான் ஆதிகா பேசிய”

“நானும் எடுக்கோணுமென்டு நெனச்சிக்கோ நின்ட”

“இன்ரவியெல்லம் எப்பிடியன்?”

“நல்லம். எங்கட மாகாணத்தில ஆள்கள் கொறவு. எல்லாருக்கும் கெடக்குமென்டு செல்லியாங்க”

“மெய்யா........ எங்கட தென் மாகாணமே......... தமிழ் ஸ்பெஷல் நான் மட்டுந் தான்...... எனக்கும் கெடக்கும்”

“எப்பிடியன் ஹஸான்கான்?”

“ஊரிஸ்கூலுக்கு கெடக்கும் போல. மாக்ஸ் கூடத்தானே”

“அடுத்த மாஸமே குடுக்கியாம். அப்பிடீம் இப்படீம். ரெண்டு வருஷம் நிம்மதியா நின்ட”

“ஜொப் கெடச்சொடன கலியாணக் கத தொடங்கும். அதோட எல்லாக்கூத்தும் சரி”

“ஓடி......”

"சரி நான் மறுக எடுக்கியனே, வெக்கியன்"

"நல்லம்"- ரிஸிவரை வைத்தாள் ரிமாஸா.

❁❁❁❁❁

விண்ணப்பம் கோரல், போட்டிப் பரீட்சை, பெறுபேறு, நேர்முகப் பரீட்சையென்று இரண்டு வருட இழுத்தடிப்பின் பின்னர் பட்டதாரிகளுக்கு நியமனம் கிட்டியிருந்தது.

ஹஸான்கான் தமிழ்மொழி மூலப் பட்டியலில் மூன்றாம் நிலையிலிருந்தான். ஒவ்வொரு பாடரீதியாகவும் கூடிய புள்ளி பெற்றவர்களையே ஆசிரியர் சேவைக்குத் தெரிவு செய்திருந்தனர்.

ஆசிரிய சேவைக்குள் வரவேண்டுமென்று நினைத்த பலர் புள்ளி குறைவானதால், வெவ்வேறு திணைக்களங்களுக்கு நியமனம் வழங்கப் பெற்றிருந்தனர்.

"ஒங்களப் போல கெட்டிக்காரப் புள்ளயள் எங்கட ஸ்கூலுக்கு வந்தா எவளவு நல்லமன். ஊருப் புள்ளயென்டா மாத்தமெடுத்துக் கொண்டு போறல்லேன்"- இப்படி ஊரவர்கள் பலர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

"மெய்யா? மெய்யா?"- என்று சிரித்துச் சமாளித்தான் ஹஸான்கான்.

ஆனால் அவனது உள்மனமோ 'கொஞ்சம் வெலகி நின்டுக்கோ' என்று அவனுக்குச் சொல்வது போலிருந்தது.

அவன் மீது பலருக்கும் பெரியதொரு எதிர்பார்ப்பிருப்பது அவனுக்குத் தெரியாததல்ல. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை.

அவன் பலநாட்களாக யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டான். அது பலருக்கும் பலத்த ஏமாற்றத்தைக் கொடுக்குமென்பது அவனுக்கும் தெரியும். ஆனாலும் என்னதான் செய்வது?

கூடிய புள்ளி பெற்றும் பாடசாலை வேண்டாமென்று சொன்ன ஒரேயொருவன் அவன்தான். கட்டிடத் திணைக்களத்தில் திட்டமிடல் உதவியாளராக உடனடியாகவே கடமையைப் பொறுப்பேற்றான்.

❁❁❁❁❁

அது ஓர் கடற்கரைக் கிராமம். இருந்தும் மீன்பிடித்தலை எவருமே ஜீவனோபாயமாகக் கொள்ளவில்லை. அப்படியிருக்கும் போது, மாலுமஜி என்றொருவர் இருக்கின்றாரே அது எப்படியென்று சிலர் கேள்வியெழுப்பலாம்.

அவர் ஓய்வு நேரங்களில் களப்படிக்கோ முகத்துவாரத்திற்கோ சென்று மீன் பிடித்துப் பொழுது போக்குவார். வாலிப வயதில் சகபாடிகளுடன் சேர்ந்து பழகிய பழக்கம், அவரை மாத்திரம் விட்டுப் போகவில்லை.

திருமணத்தின் பின்பும் அது தொடர்ந்தது. கறிக்கு உதவுவது ஒருவகையில் வாழ்க்கைச் செலவை இலகுவாக்கியது. கடல் மீனுக்கு ஒருவித பஞ்சமுமில்லாதது வேறு விஷயம்.

என்னதான் சொன்னாலும் நடுத்தர வயது கடந்தவர்களுக்கு ஆற்று மீனென்றால் ஒருவித பிடிப்புத்தான். அதிர்ஷ்டம் வேலை செய்யும் நாட்களில் மேலதிகமாக மீன் பிடிபடும். அந்நாட்களில் இரண்டொரு கோர்வைகளை யார்யாருக்காவது விற்றுவிடுவார். அது ஒரு மேலதிக வருமானமாக அமைந்துவிடும். காலப் போக்கில் தவிர்க்க முடியாத தொழிலாக அவருக்கது மாறிவிட்டது.

அதனால் அப்துல் மஜிதென்ற அவரது பெயர் சுருங்கி, 'மீன்' என்பதற்கான சிங்களச் சொல்லும் இணைந்து 'மாலுமஜி' என்பதே பெயராக நிலைத்துவிட்டது. அந்நாட்களில் ஹஸான்கானை 'மாலு மஜீட மகன்' என்று தான் அறிமுகப்படுத்துவார்கள். புத்தி தெளியும் வயது வரை அவனுக்கு இதுவொரு பிரச்சினையாகத் தெரியவில்லை.

சின்னவயதில் வாப்பாவுடன் சேர்ந்து சிலபோது அவனும் மீன்பிடிக்கச் செல்வான். களப்புப் படிக்கட்டில் அமர்ந்து, தூண்டில் வீசி மீன் இழுப்பதை மிகுந்த ரசனையோடு பார்த்துக் கொண்டிருப்பான். தூண்டிலில் மீன் சிக்கித் துடிக்கும் போது அவனும் துடிதுடிப்பான்.

மீன் பிடித்துக் கொண்டு வரும் போது சிலர் இடைநடுவில் வாங்கிக் கொள்வார்கள். "அந்திக்கி பொடியன அனுப்பே சல்லி குடுக்கியன்" என்று சொல்லிச் செல்வார்கள். வாப்பா மறந்து போனாலும் அவன் வீடு தேடிச் சென்று காசைக் கொண்டு வந்துவிடுவான்.

மீன் பிடிக்கச் செல்லும் போது, இரையாகத் தூண்டிலிலே கொழுகுவதற்கு ஓடையடியிலே சிறிய மீன்கள் பிடிப்பார்கள். கம்பி

லேஞ்சை வாப்பாவும் மகனும் இருபக்கமாகப் பிடித்து நீருக்குள் ஆழ்த்தி மேலுயர்த்தும் போது சிறிய மீன் கூட்டம் அதிலே அகப்பட்டு விடும். அவன் அள்ளியள்ளி சின்ன முட்டிக்குள் போடுவான். அதற் குள் மீன்கள் கிஜுகிஜுவென்று தெரியும். முட்டியின் வாயை சிரட்டை யால், மூடி, கழுத்துக் கயிற்றால் தூக்கியபடி அவன் செல்வான்.

மழை பெய்து ஓடையில் நீரோட்டம் கூடும் போது இரை மீன் பிடிப்பது கஷ்டமான காரியமாகிவிடும். அந்நாட்களில் சேற்று நிலத் தைக் கிண்டி மண்புழு தேட வேண்டியது அவன் பொறுப்பாகிவிடும். ஆரம்பத்தில் அருவருப்பாக இருந்த போதும், போகப் போக மண்புழுக்களை அளைய அளைய அவன் பழகிவிட்டான்.

அப்பொழுது அவன் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந் தான். வகுப்புக்கு வந்த புதிய ஸேர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். மாணவர் பெயர், பெற்றார் தொடர்பான விபரங்களை கிரமமாகக் கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

அவன் எழுந்த போது, மாலுமஜி, காவேன், களப்புமீன் என்றெல் லாம் பின்னாலிருந்து நையாண்டி செய்தார்கள். "யாவாரம்" என்று சுருக்கமாகச் சொன்னபோது, இன்னும் ஏதேதோவெல்லாம் சொல்லிச் சிரித்து அவனது மனதைக் குத்திச் சித்திரவதை செய்தார்கள்.

அன்று வீட்டுக்குச் சென்றவன் "வாப்பா இனி நீங்க மீன் புடிக்கப் பொகவாண. போனா நான் ஸ்கூலுக்குப் போறல்ல"- என்று அடம் பிடித்து அழத் தொடங்கிவிட்டான்.

மகன் படிப்பில் கெட்டிக்காரனென்று அவருக்குத் தெரியும். மக னின் கௌரவத்தைப் பாதுகாக்குமாறு மனைவியும் வேறு நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள்.

எந்த முடிவுக்கு வரமுடியாத நிலையில் கரையில் போட்ட மீன் போல மாலுமஜி துடிதுடித்தார்.

❁❁❁❁❁

"ஒங்கட மகன் ஜாதியா பாஸாகீக்காம்"

பாதையில் கண்ட பஸ்லூன் நானா சொன்னதைக் கேட்டு மாலு மஜி மகிழ்ச்சிப் பனியில் அமிழ்ந்து போனார். அவர் எதிர்பார்க்க வேயில்லை. ரிஸல்ட் விஷயம் கூடத் தெரிந்திருக்கவில்லை.

ஏழெட்டுப் பேர் ஓ.எல் சித்தியடைந்திருந்தார்கள். ஏ.எல் படிக்கவென்று வெளிக்கிட்டவர்களை தடுத்து நிறுத்துவது முடியாத காரியமாகப் போய்விட்டது. இங்கு படித்துப் பாஸ் பண்ணலாமென்று எவருக்கும் நம்பிக்கையிருக்கவில்லை. சிலரின் விடாப்பிடியால் நான்கே பிள்ளைகளை வைத்து முதற் தடவையாக ஏஎல் வகுப்பை ஆரம்பித்துவிட்டார்கள்.

இரண்டு ஆசிரியர்கள் எப்படியாவது பிள்ளைகளைப் பாஸ் பண் ணிக் காட்டுவோமென்று வைராக்கியத்துடன் இரண்டு வருடம் செயற்பட்டனர்.

இந்த நிலைப்பாடுகள் ஹஸானுக்கு சாதகமாக அமைந்துவிடடது. இல்லாவிட்டால் மகனையும் வெளியூருக்கு அனுப்பிவிட்டு பணத் துக்கு என்ன பண்ணுவதென்று விழிபிதுங்கி நின்றிருப்பார் மாலுமஜீத்.

"ஆ......... நாலு புள்ளயள் பாஸாகீக்கி. ஒங்கட மகன் தான் கூட ஸ்கோர் எடுத்தீக்கி"

சைக்கிளில் வந்த இரு ஸ்கூல் பொடியன்கள் நிறுத்திச் சொல்லிச் சென்றார்கள். மாலுமஜீக்கு எதுவுமே புரியவில்லை. கிரிக்கட் விளை யாட்டில் தான் ஸ்கோர் எடுப்பார்கள். ஏதோ பகிடி விட்டிருப்பார்கள் என்று கூட நினைத்தார்.

வந்த வேலையையும் மறந்து மனைவியோடு இந்த நல்ல செய்தியைப் பகிர்ந்து, அவளது துள்ளாட்டத்தைப் பார்த்து ரசிக்க அவசரமாக வீடு திரும்பினார்.

கதவு திறந்து கிடந்தது. வீட்டில் யாரோ இருப்பதை அது உறுதிப் படுத்தியது. மச்சானின் ஆரவாரமான குரல் அவரது காதுகளில் வந்து முட்டியது.

"ஆ எனக்கு முந்தி ஒங்களுக்கு கேள்விப்பட்டீக்கி போல......." மாலுமஜி மகிழ்ச்சிப் பூரிப்புடன் சொன்னார்.

மனைவி தேசிக்காய்ப் பானம் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

"எங்கட அடுத்தூட்டு ஸித்தும்மட மகளும் எடுத்தேன். அவள்தான் ஓடிவந்து சென்ன....... எல்லம் அல்லாட நாட்டாந்தான்"- மர்லின் நானாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

மச்சானும் மச்சானும் எதிரும் புதிருமாக அமர்ந்து நீண்ட நேரமாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சமையல் வேலையில்

மூழ்கியிருந்தாலும், காது கொடுத்துக் கொடுத்து இடையியே அவளும் வாய்போடத் தவறவில்லை.

கெம்பஸ் போய் பெரிய படிப்புப் படிக்கச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளதையும், இதற்காக மூன்று வருட மேலதிக செலவு பற்றியும், குடும்பத்துகே கிட்டியுள்ள பெருமையென்பதையும் அவர்கள் ஒட்டுமொத்தமாக வெளிப்படுத்தினர்.

மச்சான்காரன் நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்துள்ளதையிட்டு மாலுமஜிக்கு சற்றே பொறமையாகவுமிருந்தது.

"சரி டைமாகிய நான் பொகோணும். நல்லொரு சாப்பாடு போடோணுமெண்டு ஆமின செல்லிய........ அவசரப்பட வாணான்ட நான்"- என்றவாறு அவர் படியிறங்கினார்.

❁❁❁❁❁

சித்தியடைந்த பிள்ளைகளுக்கு ஒரு பாராட்டு விழா பாடசாலையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

குறித்த பிள்ளைகளின் பெற்றோர், ஊர் முக்கியஸ்தர்களென்று மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே அழைக்கப்பட்டிருந்தனர். ஏனைய மாணவர்களை உற்சாகப்படுத்துவதே அந்த ஏற்பாட்டின் நோக்கமென்பது வெளிப்படையானதே.

மாலுமஜி, மனைவி, மர்லின் நானா, அவர் மனைவியென்று ஹஸான் சார்பிலான குடும்பத்தவர்கள் முன்பக்க ஆசனங்களிலே அமர்ந்திருந்தனர்.

அந்தப் பகுதிக்குப் பொறுப்பான கல்வி அதிகாரியை அதிபர் வரவேற்றார்.

"குறைந்த வசதிக்கு மத்தியில் நாம் மாணவர்களுக்கு வகுப்பு ஆரம்பித்தோம். வசதியுள்ளவர்கள் பிள்ளைகளை வெளியே அனுப்புகிறார்கள். வருடா வருடம் நாலைந்து திறமையான பிள்ளைகள் படிப்பைத் தொடர முடியாமல் இடை நிற்கின்றனர். இனி இந்தப் பிரச்சினையில்லை. இதைப் பெற்றார்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்"- என்று அதிபர் குறிப்பிட்டார்.

இரண்டு பாடங்களைக் கற்பித்ததோடு வகுப்பை நெறிப்படுத்திய வெளியூர் ஆசிரியர் ஐயூப்கான் அடுத்து உரையாற்றினார்.

"இங்கே சுடர்விடுகின்ற நான்கு விளக்குகளை நாங்கள் பார்க்கிறோம். இவர்கள் பல்கலைக்கழகங்களுக்கோ, கல்விக் கல்லூரிகளுக்கோ நிச்சயமாகத் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் இன்னும் மூன்றோ நான்கோ ஆண்டுகளில் ஆசிரியர்களாக இதே பாடசாலைக்கு வரவேண்டும். எங்களைப் போன்ற வெளியூர வர்கள் எப்பொழுதும் இங்கே இருக்கமாட்டார்கள். ஊரவர்களால் இப்பாடசாலை தன்னிறைவடைய வேண்டும். அதற்கான வாயில் இப்போது திறக்கப்பட்டுள்ளது. இவர்களை விளக்குகளென்று குறிப்பிட்டேன். ஒரு விளக்கின் மூலம் பலநூறு விளக்குகளுக்கு ஒளியேற்ற முடியும். ஆமாம் இவர்கள் விளக்கேற்றும் விளக்குகள்"

மனதைத் தொடும் வகையிலான இந்த உரையை மாணவர்கள் கைதட்டி வரவேற்று ஆரவாரம் செய்தனர்.

'மிலேனியம் கோல்ட் ஹவுஸ்' அன்பளிப்புச் செய்திருந்த தங்கப் பதக்கங்களைக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களுக்கு வழங்கினார்.

❁❁❁❁❁

பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் உதவிச் செயலாளராக ஹஸான் தெரிவு செய்யப்பட்ட செய்தி ரிமாஸாவின் காதில் விழுந்தது. அதே கிராமத்தைச் சேர்ந்தவள் என்ற வகையில் அவளுக்கும் அது பெருமைதான்.

"ஹஸான் உங்க ஊராமே"- என்று சகமாணவிகள் அவளிடம் சொல்லும் போது, ரிமாஸாவுக்கு கைகால் புரியாது. கூடவே மாலு மஜியின் நினைவு மேலிட்டால் குழம்பித்தான் போவாள்.

முதல் வருடத்திலேயே மெல்லிய ஒளிவீசத் தொடங்கிய ஹஸான், அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒரு நட்சத்திரமாகவே பிரகாசிக்கத் தொடங்கினான்.

மேடை வாய்ப்புக் கிடைக்கும் போது, சமூக உணர்வை வெளிப் படுத்தும் பல பேச்சுக்களை அவன் நிகழ்த்தத் தவறவில்லை. எதைச் செய்தாலும் ஒரு கவர்ச்சி அவனில் தெரிந்தது.

ஹஸானின் பாய்ச்சல் எவருமே எதிர்பாராததுதான். விரிவுரை யாளர் மத்தியிலும் அவனுக்கு நல்ல இடமிருந்தது.

'விளக்கேற்றும் விளக்கு' என்று அன்று கௌரவிப்பு விழாவின்

போது, ஸேர் பேசியதற்கேற்ப, தன்னை முற்று முழுதாக ஹஸான் தகுதியாக்கிக் கொண்டு வருவதையிட்டு, உண்மையிலேயே ரிமாஸா பொறாமைப்படவில்லை. அவளால் அந்தளவுக்கு உயர முடியாவிட்டாலும், சமூகப் பணிக்குப் பக்கபலமாக இருக்கவாவது முடியுமென்றே அவள் கருதினாள்.

கிராமத்தின் எதிர்கால கல்வி அபிவிருத்திப் பணியில் நூறு வீதப் பங்களிப்பை வழங்குவானென்று முழுமையாக அவள் நம்பினாள்.

அவர்களது கல்வியின் இறுதியாண்டு அது. எதிர்பார்த்தது போல் முஸ்லிம் மஜ்லிஸ் பொதுச் செயலாளராக அவன் தெரிவு செய்யப்பட்டான். நன்றி தெரிவித்து உரையாற்றும் போது...........

“இந்த வருடம் சாதாரண தர மாணவர்களுக்கு மாவட்டரீதியாகக் கருத்தரங்கு நடாத்தவுள்ளோம். அந்தப் பணி அதோடு முற்றுப பெறக் கூடாது. இங்கிருந்து வெளியேறினாலும் எமது அங்கத்த வர்கள் அந்தந்த மாவட்டங்களில் இப்பணியை முன்னெடுக்க வேண்டும்”

உணர்ச்சிகரமான அந்த உரையைக் கேட்டபோது, ஊருக்கு மட்டுமல்ல இந்நாட்டின் முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கே வழிவகுக்கக் கூடியவனென்று எண்ணி மகிழ்ந்தாள் ரிமாஸா

❁❁❁❁❁

மாலுமஜி மீன் பிடிப்பதை மெல்ல மெல்லக் கைவிட்டு ஐந்து வருடங்களாகிவிட்டன. அவருடைய வயதும் ஐம்பதுக்கு மேலாகி விட்டது.

சும்மாவா? இப்பொழுது ஒரு பட்டதாரியின் வாப்பா. பெரிய அந்தஸ்து.

பணக்காரர் சிலரின் பிள்ளைகளும் அரசாங்க உத்தியோகத்தர் களின் பிள்ளைகளுமே இங்கு பெரிய படிப்புப் படித்தவர்களாக இருந்தனர். அதனை எந்தவிதத் திட்டமிடலுமில்லாமல் முறியடித்து விட்டவர் தான் மாலுமஜி.

ஒரு பட்டதாரியின் வாப்பாவென்றால் பெரிய அந்தஸ்துதான்.

வயதும் ஒரு சமூக கௌரவமும் மெல்ல மெல்ல அரவணைக்கும் போது, அதற்கேற்ற விதமாகத் தன்னை மாற்றிக் கொள்ள அவர் தயங்கவில்லை.

ஜும்ஆவுக்கு மாத்திரம் போய் வந்தவர் இப்பொழுது தினசரி ஐவேளை பள்ளிவாசலுக்குப் போய் வந்தார். தொப்பியும் நீளக்கை சேட்டுடனும் காணப்பட்டார். வெண்மயிர்களின் விளைச்சல் முகத்திற்குத் தனியழகைக் கொடுத்தது.

என்னென்ன மாற்றங்கள் நடந்தேறினாலும் அவர் எதிர்பார்த்தது போல் எவருமே அவரை மஜீது நானா என்று அழைத்தாரில்லை. மாலுமஜி என்பது எல்லோர் மனதிலும் மிக வலுவாகத்தான் பதிந்து போயிருந்தது.

வயதையும் தற்போதுள்ள சமூக அந்தஸ்தையும் கருத்திற் கொண்டோ என்னவோ 'மாலுமஜி நானா' என்று ஒரு சிலர் சொல்ல ஆரம்பித்திருந்தனர். அவரது ஒரே துஆ இந்த 'மாலு' மறைந்து விடவேண்டுமென்பது தான்.

❋❋❋❋❋

"ரெண்டு பேரும் செல்லாமப் பேசாம பெய்த்திட்டு வந்த. ம்........ நானும் எவளவு ஆசப்பாட்டோட நின்டன். ஒங்களுக்கு மட்டுமா சந்தோஷம்........ எங்களுக்கில்லயா?"

கோபத்தோடு வந்து........ கோபத்துடனே பேசி. கோபமாகவே வெளியேறிச் சென்றார் மர்லின் நானா.

மாலுமாஜியும் அவர் மனைவி ஆமினாவும் சொன்ன நியாயங்கள் எதுவும் அவர் முன்னிலையில் எடுபடவில்லை.

"ம்...... நானக்கும் ஆசப்பாடு ஈந்தீக்கும் தானே"

"மச்சனுக்கு இப்ப சென்னத்துக்கு வெளங்கியல்ல..... பொறகு ஆறியமந்து செல்லோம்"

ஹஸான் எவருக்குமே சொல்லாமல் பேசாமல் இருந்துவிட்டு, இரவு இரண்டு மணி பஸ்ஸில் உம்மாவையும் வாப்பாவையும் கொழும்புக்கு அழைத்துச் சென்றுவிட்டான்.

பட்டமளிப்பு விழாவென்பது முன்பின் அவர்களுக்குத் தெரிந்த விஷயமல்ல. பஸ்ஸில் ஏறிய பின்புதான் இப்படியொன்று இருப்பதாக அறிந்தார்கள். குளுகுளு மண்டபத்தில் அமர்ந்து நிகழ்வுகளை அவதானித்த போதுதான் இவ்வளவு பெரிய விஷயமாவென்று அதிசயத்தார்கள். கூர்கோணத் தொப்பியும் கறுப்பு நீள அங்கியுமாக

மகனை மேடையில் கண்டபோது அவர்கள் இந்த உலகத்திலேயே இல்லை.

"மச்சானும் மதினீம் கட்டாயம் வந்தீக்கோணும்..... படிக்கப் பொகச் செல்லே சாப்பாடு குடுத்து வழியனுப்பின மனிசன்"- மண்டபத்தில் வைத்தே குற்ற உணர்வோடு மனைவியின் காதில் குசுகுசுத்தார்.

அவனது நெருங்கிய நண்பர்கள் கூட தங்களுக்குச் சொல்லவில்லையே என்று வந்து சண்டை போட்டார்கள்.

என்ன செய்வது? இனி மகன் சொல்கின்றபடி அவர்கள் இயங்க வேண்டிய நிலை. மாற்றுக் கேள்விக்கு இடமில்லை.

பட்டம் கிடைத்த அவசரத்திற்கு தொழில் கிடைக்கவில்லை. போட்டிப் பரீட்சை........அது இதுவென்று காலம் இழுபட்டுச் சென்றது.

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் உதவுமாறு அதிபர், ஆசிரியர்கள், அபிமானிகள் கேட்டுக் கொண்ட போதும், ஹஸான் நிறைவான ஆதரவைக் காட்டாது ஒருவித நழுவல் போக்கிலேயே செயற்பட்டான்.

அரசாங்க நியமனம் கிடைக்காமல் இப்படி இயங்குவது சரியில்லையென்றுதான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். அதிலும் உண்மை இல்லாமலில்லை தற்செயலாகக் கிடைக்காமல் போனால்......... ஓர் அகௌரவமல்லவா?

எப்படியோ இரண்டு வருட இழுத்தடிப்புக்குப் பின் ஆரவாரமாகப் பட்டதாரி நியமனத்திற்கான சல சலப்பு ஆரம்பித்திருந்தது.

❀❀❀❀❀

'ட்றிங் ட்றிங்'

"ஹலோ"

"நான் ஆதிகா பேசிய"

"எப்பிடியன் ஸ்கூல்?"

"நல்லம்...... சந்தோஷம். ஒனக்கெப்பிடியன்?"

"ஊர் ஸ்கூல். எங்கள உருவாக்கின ஸ்கூல்....... ஒரு கடமப் பாடீக்கிதானே?"

"வெரிகுட்.......... இனி கலியாணத்தானே?"

"போடீ"

"அது சரி ஹஸான்"

"இப்ப கெம்பஸில நீ கண்ட ஹஸானல்ல. ஸ்கூல் வாணான்டு பில்டிங் டிபாட்மென்டுக்கு பெய்த்திட்டான்"

"அல்லா....... அவனுக்கு எனத்தியன் நடந்தீக்கி"

"பாத்தா ஒரு ஹஸரத்த பாத்த மாதிரி"

"மெய்யா....... வெளங்குது வெளங்குது. அப்ப பெரிய எடத்துக்கு மாப்பிள போற பிளேன் போலீக்கி"

"கெரெக்டா செல்லீட்டாய்"

"வெக்கியன்"

# அகமுகம்

வீட்டில் சின்னதொரு சாப்பாடென்றாலும் உஸைமாவுக்கு உச்சி யில் பூப்பூத்து விடும். கூட்டம் குடும்பத்தைக் கூட்டிச் சோறு போட்டுக் களிப்புறுவதில் அவளுக்கு அலாதியான ஆனந்தம்.

வேலையும் வீடுமென்று இயந்திரகதியில் நாளோட்டும் அவர்களது நிகழ்ச்சி நிரலில், நாலு பேரை அழைத்து நல்ல விருந்தொன்று நடாத்தும் விடயத்திற்கு இடமேயில்லை.

நேற்றுத்தான் தொலைபேசித் தகவல் கிடைத்தது. மகனையும் மருமகளையும் கதிர்காமத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் வீட்டுக்கு வருகிறார்களாம். நண்பர்தானென்றாலும் உறவினர்களை விட இறுக்கமான தொடர்பு. கல்யாணத்திற்குக் கூட முன் கூட்டியே சென்று கலந்து கொண்டது அதனால்தான்.

"நாங்க கொழும்புக்கு போறவார நேரமெல்லம் அங்க எறங் கிய........ தின்னிய குடிக்கிய. ஆசைக்கருமக்கி அவங்கவார. அன்ன செல்லீட்ட ஜாதியா கவனிக்கோணும்....... ஒரு கொறபாடும் வெக்கப் படாது"- இர்ஷாத் மனப்பூர்வமாகச் சொன்னான்.

"வாரவங்க ஒரு ஸஹன். எங்கடூட்டில ஒரு ஸஹன்...... இன்டக்கே சின்னச் சின்ன வேலயள செஞ்சி வெக்கோணும்...... அடுத்தூட்டு பாத்திமுத்த வரச் சென்னா லேசி..... ஆஸிமாமிக்கி செல்லியனுப்பினா வந்து ஆக்கித்தாரொன்டும். இனி அவங்களுக்கும் ஒரொரு பிங்கான் குடுக்கோணுமேன். எப்பிடீம் மூனு ஸஹனாகிய"

உஸைமாவின் கணக்கு அவனுக்கும் சரியாகவே பட்டது. வேறென்ன செய்வது....... அங்கீகாரம் வழங்கினான். மனதுக்குள் ஐந்து ஸஹன் திட்டத்தோடு, மூனுக்கு அனுமதி பெற்றுக் கொண்ட விடயம் அவனுக்கு வெளிச்சமாகவில்லை.

"நான் இன்டக்கே ஆஸிமாமீக்கிட்டக் கேட்டு லிஸ்ட் போட்டு வெக்கியன். நீங்க சாமானியளக் கொணு வந்து தாங்கொ. நான் மத்தமத்த வேலயளப் பாக்கியன்"

முதற் கட்ட ஏற்பாடு பூர்த்தியாகிவிட்ட மகிழ்ச்சியோடு இர்ஷாத் சாய்ந்து கொண்டான். மாதாந்தம் ஏதாவது மிச்சம் பிடிப்போமென்று பார்த்தால் நினையாப் பிரகாரம் ஏதாவதொன்று வந்து கழுத்தை நெரித்துவிடும். இருந்தும் அதற்கு மேலால் இதயமெங்கும் ஒருவித பரவசம் நிரம்பி வழிந்தது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று கலந்த காலம் அது. ஆடலும் பாடலும் ஆரவாரமுமாய் படிப்புத் தொடர்ந்தது. மூன்று வருசத்தோடு எல்லாம் சரி. தற்செயலாக எங்காவது கண்டால் 'ஹலோ மசான்' அவ்வளவுதான். முப்பது வருடம் கடந்தும் இன்னும் தொடர்கிறதென்றால் அது இர்ஷாத் அன்வர்கான் தொடர்பு தான்.

"ஆ சாஞ்சி கொண்டீந்து சரிவாரல்ல. எத்தின வேல வெட்டீக்கன். சரி இந்தாங்கொ பிளேன்ரீ"

பிளேன்ரீ என்றதும் அவனுக்குத் தெம்பு பிறந்து விட்டது. எடுத்து ஒரு 'தம்' அடித்தான்.

"ம்... இனிப்புக் கசம்"

"மெய்யா பேச்சீல பேச்சீல மிச்சமா சீனி போடுப்பட்டீக்கும். ஒங்களுக்கு சீனி வியாதி வாரல்ல குடீங்கொ...... அதுசரி முந்தி முந்தி புதிய பொண்ணக் கூட்டிக் கொணுவார. வெறுங்கையோட அனுப்பேலுமா?...... ஹதியா குடுக்கோணுமே"

இர்ஷாத்தின் தலை கிறுகிறுத்தது. இப்பொழுதே தலைக்கு மேல் வெள்ளம் போய்க் கொண்டிருந்தது.

"ஒரு ஆயிரம் ரூவக்குமட்டு......."

"போதும் போதும்.... கலியாணத்திலேம் குடுத்ததானே..... முந்தி முந்தி வாரதேன்........ குடுத்தால் தான் பஸந்து"

ஏதாவதொன்றைத் தொடங்கினால் எந்தக் குறையும் வைக்காமல் எல்லாச் சடங்கு, சம்பிரதாயங்களையும் ஒழுங்காகச் செய்வா ளென்பது அவருக்கு ஒன்றும் தெரியாத விஷயமல்ல.

"சரி கி.்.ப்ட் ஸென்டருக்கு பெய்த்திட்டு வாரன்"

இர்ஷாத் எழுந்துவிட்டான்.

❋❋❋❋❋

முற்றத்துப் பூச்செடிகளில் வருபவர்களை வரவேற்குமாப் போல் புதுப் பூக்கள் பூத்துச் சிரித்தன. விடிகாலைப் பனிதோய்ந்து கண்களுக்குக் குளிர்ச்சியூட்டின.

திருத்த வேலைக்காகக் கொண்டு வந்த சீமெந்துக் கற்கள் மதிலோரமாக அடுக்கப்பட்டிருந்தன. அவ்விடத்தில் அவையிருப்பது பொருத்தமற்றதாகவே இர்ஷாத்துக்குப் பட்டது. அவற்றைப் பின்பக்கமாக அடுக்கி, முற்றத்தைப் பெருக்கிவிட்டால் அந்தமாதிரி இருக்கும் போல் தெரிந்தது.

மெல்லிய ஒளிக்கதிர்கள் பளபளத்து விழுந்து கொண்டிருந்தன. ஒருமுறை கேற்றடிக்குச் சென்று நீள் பாதையைக் கூர்ந்து பார்த்தான். சைக்கிள் எதுவும் வருவதாகத் தெரியவில்லை.

நேற்று இரவு இர்ஷாத் தொழுதுவிட்டு வெளியிறங்கும் போது, பள்ளியடியில் பாபுதீனைக் கண்டான். அவன் எதிர்பார்த்திருக்காத போதும் சட்டென்று 'இறைச்சி' ஞாபகம் வந்துவிட்டது.

"பாபுதீன் ஒன்னத்தான் தேடிக்கோ நின்ட"

"எனத்தியன் ஸேர் ஊட்டில சாப்பாடியலா?"

"ஓ எனக்குக் கொஞ்சம் எறச்சி தேவ. மூனு கிலோ எறச்சீம்...... பெரியத்தில மூனு கோழீம் வோணும். மெய்தான் வெளணேம தரோணும். பகல் சாப்பாட்டுக்கு"

"எட்டு மணிக்கு கொணந்தாப் போதும் தானே"

"எட்டு மணியென்டா எட்டு மணி... எட்வான்ஸ் தரவா.........."

"இல்லில்ல வெளணக்கி எடுத்துக் கொளேலும்"

"டேய் முத்தின கோழியள கொணராதே"

"இல்ல ஸேர்.... நல்ல நாம்பன் ஸைஸ் கொணுவாரன் நாட்டுக கோழி"

சொன்னபடி செய்வானென்பதில் இருஷாத்துக்கு பூரண நம்பிக்கையிருந்தது.

"நல்ல பொடியன். ஞாயமான வெல செல்லுவான். கசலி பண்ணாம குடுக்கியத்த எடுப்பான்"

இப்படி எல்லோரும் அவனுக்கு ஸேடிபிகேட் கொடுத்து வைத்துள்ளனர்.

கற்கள் ஒவ்வொன்றாக பின் பக்கமாகக் கொண்டு போய் அடுக்கி முற்றத்தைப பெருக்கி முடிக்கையில் களைத்தே போய்விட்டான். படிக்கட்டில் அமர்ந்து சிறிது நேரம் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குகை யில்..... கேற்றடியில் மணியொலித்தது.

பாபுதீன் வந்திருந்தான்.

"இந்தாங்கொ ஸேர் ஒர்ஜினல் சாமன்"

ஒமலைத் திறந்து பார்த்தான் இர்ஷாத். அறுத்து உரித்த கோழி கள் நிர்வாண கோலத்தில் கிடந்தன. மஸ்கத் போல் இறைச்சிக் குற்றி வேறு.

"பொறகு வாரன்"

பாபுதீனுக்கு இது பெறுமதியான நேரம். ஓடர்களைக் கடகட வென்று கவனித்து முடிக்க வேண்டுமல்லவா?

இறைச்சி உமலோடு பின்பக்கமாக குசினிக்குள் சென்றபோது, மனைவி பழைய பிளாஸ்டிக் கதிரையொன்றில் ஆறுதலாக அமர்ந்தி ருந்தாள். அடுத்த பாய்ச்சலுக்கான இடைக்கால ஓய்வு போலும்.

நேற்று விடயத்தைக் காதில் போட்டது முதல் இதுவரையில் அவளுக்கு இடுமூச்சினை இல்லாத வேலை.

வட்டிலப்பம் அவித்தல், அச்சாறு போடல், கத்தரி- வாழை பொரித் தல், வெங்காயம் அரிதல், முற்றத்தில் மூன்று கல் அடுப்பொழுங்கு, உதவியாளர்களை, உறுதிப்படுத்தல்.... இப்படி கால்களில் சக்கரம் பூட்டியபடி இயங்கி பெரும் பகுதியை ஒப்பேற்றியிருந்தாள்.

"சின்ன விஷயமொன்டு செய்தென்டாலும் இந்தக் காலத்தில செரியான செலவுவலுவெனா? வாப்போவ் ஒறொரு சாமன்ட வெல. மனிசரு நூறு இருநூறு சவனென்டு கலியாணம், கந்திரி எப்பிடிச் செய்தோ தெரிய"

"நீங்கொன்டுக்கும் கவலப்படவாண. ஒங்களுக்குப் பொம்புளப் புள்ள இல்லதானே"- சிரித்தபடி சொல்லிச் சென்றார் இர்ஷாத்.

உள்ளே சென்ற அவன் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. மேசை, கதி ரைகள், ஒழுங்குபடுத்தி.... பூச்செண்டுகள் வைத்து... கதவு, யன்னல் பிடவைகள் தொங்கவிட்டு... விருந்துக் கோலம் பூண்டிருந்தது.

❁❁❁❁❁

ஆஸிமாமி வந்தால் ஒரு கலகலப்புத்தான்.

எல்லாப் பெண்களும் சமைத்துப் போடுகிறார்கள். சிலருக்கோ அது கைவந்த கலை. சம்பிரதாயச் சரக்குகளோடு அவள் திருப்திப் படுவதில்லை. நூறு வீதம் அச்சொட்டாக எல்லாம் அமைய வேண்டும். சமைக்கும் போதே கும்கும்மென்ற மணம் மனதை நிறைக்கும்.

சீரகச் சம்பாவில் நெய்ச்சோறு. இறுக்கமான ஆணத்துடன் கோழிக்கறி, இறைச்சி துண்டுவெட்டி குருமா, கழியா, சலாதுச் சம்பல்........ சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான சமையல் வகை மாதிரி களை ஆஸிமாமி தீர்மானித்துவிட்டார். இனி அதில் எவரும் குறுக்கே நிற்க முடியாது.

ஏலம், கராம்பு, பசுநெய், என்று இன்னொரு மேலதிகப் பட்டியல் விரிந்தது. சின்னவனுக்கு பெரும் கொண்டாட்டம். கடைக்கு ஓடுவதும் வருவதுமாகவிருந்தான்.

"பாத்துப் பாத்து நின்டா நேரம் போற......... அரிசக் கழுகி அடுப்பில வெய்ங்கோ........."

அப்போது தான் வந்து சேர்ந்த உஸைமாவின் தங்கை அதைப் பொறுப்பெடுத்தாள். பக்கத்து வீட்டுப் பாயிஸாவும் துணை நின்றாள்.

"எறச்சி வெட்டிக் கழுகீட்ட..... எங்கியன் கொச்சிக்கத்தூள், கொத்தமல்லித்தூள், வெங்காயம் பச்சக்கொச்சிக்க....... நான் போட்டுத்தாரன் நல்லாப் பெரட்டு"

உஸைமா அதைக் கையேற்றாள்.

மூடி வைத்திருந்த பானையைத் திறந்து பார்த்து, அதில் வெங்காயத் துண்டுகளைக் கண்டதும் அகப்பையால் புரட்டிப் பார்த்தார். "இதெனத்தியன்டீ ஈச்சம்பழம் போடல்லயா? ஈச்சம்பழம் நூறு அழுப்பிச்சி கசக்கிப் போட்டு கொஞ்சம் சூடுகாட்டி எடு"- என்றாள்.

ஆஸிமாமியின் கீழ் ஆறுமாதம் டிரய்னிங் எடுக்கவேண்டும் போலிருந்தது உஸைமாவுக்கு.

"கத்திருக்க, வாழக்க பொரிச்சி வைச்சீக்கே.......எங்கியன் நொரீரல்?.......... அந்த எறச்ச பாரு பாக்க"

"கொணுவரச் செல்லல்லேன்"- உஸைமா சொன்னாள்.

"நொரீரல் போட்டால் தான் கழியாக் கறி நல்ல சுவாது. கடப்பூட்ட முந்தி அழப்பீ....."

அவள் முன்வாசலுக்கு வந்தபோது கணவனைக் காணவில்லை. மூத்தமகன் ரீவி பார்த்துக் கொண்டிருந்தான்.

"மகன் எறச்சிக்கட பூட்டமுந்திப் பெய்து நொரீரல் நூறுருவகு எடுததுக் கொணுவாங்கொ"- என்றவாறு நூறு ரூபாத் தாளொன்றை நீட்டினாள்.

நிகழ்ச்சி பார்ப்பது குழம்புகிறதேயென்று அவனுக்குக் கோபம் வரவில்லை. கிஜி கிஜிவென்று சனம் நிறைந்திருக்கும் இறைச்சிக் கடைக்குப் போய், எப்படி நூறு ரூபாவை அதுவும் நுரையீரல் கேட்டு நீட்டுவதென்பதே பிரச்சினையாகத் தெரிந்தது அவனுக்கு. அவனது வயது அப்படி!

"பைஸ்கல்ல டக்கென்டு பெய்த்திட்டு வாயே மகன். ஆஸிமாமி கொரோடியொன்டும். பதினொரு மணியாகப் போற........."

"அவளது தூரத்துக்கு அவனுக்குப் பொகேலுமா?"

"கழியாக்கு போடியத்துக்கென்டு கேளு. அங்களதான மூனு கிலோ எறச்சி கொணுவந்த......"

உண்மையில் எங்கிருந்து இறைச்சி கொண்டு வரப்பட்டதென்று அவளுக்குத் தெரியவே தெரியாது. ஆனால் அவனை அனுப்புவதற்காக இதற்கு மேலும் ஏதாவது சொல்ல முடியுமென்றால் அதையும் தயங்காமல் சொல்ல வேண்டிய கட்டாயம்.

"சரி சரி கொணுவாரன். நீங்க ஒங்கட வேலயச் செய்ங்கோ"

❀❀❀❀❀

முக்கிய சந்திப்பொன்றுக்கு இர்ஷாத் சென்று வரும்போது கும்கும்மென்ற மணம் அவனை வரவேற்றது. நேரே சமையலறைப் பக்கமாக இழுபட்டுச் சென்றான்.

"இன்னேம் முடியல்லயா?"- அவன் கேட்டான்.

"ளொஹருக்கு பாங்கு செல்லமுந்தி சாப்பாடு மேசய ரெடியாக் கித் தார........... போதுமா?"- உஸைமா முன்னே பாய்ந்து சொன்னாள்.

"ஓ அவங்க இப்ப கோல் பண்ணின. இவடத்துக்கு வர எப்படீம் ஒன்னரையாகும்"

"அப்ப வேண்டிய மட்டும் டைமீக்கி"

"எனத்தியனிது இவளவு பெரிய சட்டீல சோறு வெச்சீக்கி"- முற்றத்து அடுப்பைக் கண்டு வியந்து கேட்டான்.

"சாப்பாடு விஷயம் இப்பிடித்தான். மூனென்டா அஞ்சி. அஞ் செண்டா பத்து. இது பொம்புள சாஸ்திரம். ஆம்புளயளுக்கு வெளங் கியல்ல"- இது ஆஸிமாமியின் விளக்கம்.

இர்ஷாத்துக்கு அது விளங்காமலில்லை. மெல்லிய சிரிப்போடு திரும்பியவனுக்கு, முன்னறையில் வட்டிலப்பம் போட்டு வைத்திருந்த காட்சி தெரிந்தது. மூடியிருந்த பேப்பரை மெல்ல உயர்த்திப் பார்த்தபோது காணப்பட்ட கோப்பைகளின் எண்ணிக்கை ஆஸிமாமி சொன்னதை மேலும் உறுதிப்படுத்தியது. கூடவே அவனது சிந்தை யில் ஒரு பொறி.

"உஸைமா"

அடுத்தகணம் உயர்த்திப் பிடித்தபடி ஓடி வந்தாள்.

"வாழப்பழம் வாங்கோணுமே"

"மெய்தான் எனக்கும் மறந்து பெய்த்தேன். வட்லாப்பத்துக்கு பூவாழப் பழமேன் வெக்கோணும்"

"ஒரு பத்துக் காய்"

"கத்தமே பொறவு. மானம் பெய்த்த.... தின்டசரி தின்னல்ல சரி ஒரு சீப்பு கொணுவாங்க. நல்ல பெரிய காயால பாத்து"

"ம்..... இப்ப ஒரு கிலோ நூத்து நாப்பதுருவ......ம்"

"சரி சரி லோபத்தனம் பாக்காம சீக்கிரம் போங்கொ"

தலையைத் தாழ்த்தியபடி வீதிக்கிறங்கினான்.

"இது ....... இது......"

திரும்பிப் பார்த்தான். அங்கே மனைவியின் அழைப்பு. இன்னும் என்ன சுமையை ஏற்றப் போகிறாளோ என்ற ஐயப்பாட்டுடனேயே திரும்பி வந்தான்.

"கொகா கோலா ஒரு போத்தலேம் கொணுவாங்கி..... ஒன்ன லீட்டர் பெரியது"

நினைத்தது சரிதான். மீண்டும் கூப்பிடுவதற்கிடையில் அவசர அவசரமாக நடந்தான்.

❋❋❋❋❋

இறைச்சிக் கடையை நெருங்கியதும் கள்ளக் கண்ணால் நோட்டமிட்டான் யாஸிர். அங்கே நாலைந்து பேரே இருந்தனர். வெட்கம் அவனுக்கு இடம் கொடுக்கவில்லை.

சைக்கிளை உழக்கியபடி அப்படியே பாடசாலைப் பக்கம் மெல்ல மெல்லச் சென்று, அதே வேகத்தோடு திரும்பி வந்தான். இறைச்சிக் கடையில் இரண்டு பேர் இருந்தனர். அப்படியே சின்னப் பள்ளிவாசல் வரை சென்று திரும்பி வந்தான். எவரையும் காணவில்லை. வேறு யாரும் வருவதற்கிடையில் இறைச்சிக் கடையில் கால் வைத்தான்.

வெறும் மேலுடன் ஒருவன், மாட்டின் மார்புக் கூட்டைக் கட்டித் தூக்கி கொத்திக் கொத்தி இறைச்சியை வேறுபடுத்திக் கொண்டிருந்தான். அடுத்த மெலிந்த உருவம் தராசுக்கருகே கத்தியும் கையுமாக நின்றான். அவனுக்கு அவர்களை அவ்வளவாகத் தெரியவில்லை.

"நொரீரல் நூறுருவக்கு தாங்கொ"

நூறு ரூபாய்த் தாள் அவனது விரல்களிடையே நெளிந்தது.

இருவரது கண்களிலும் ஆச்சரியம் குடி கொண்டுவிட்டது.

"இர்ஷாத் ஸேரட மகன்தானே"- மெல்லிய உருவத்தின் கேள்வி.

"அட இவங்களுக்கு என்னத் திட்டமீக்கி" என்று நினைத்தபடி "ஓ" என்றான்.

அதற்கிடையில் "டே யாஸிர்" என்ற குரல்.

பைக்கில் விரைந்தபடி யாரோ ஒரு நண்பன். யாரென்று எட்டிப் பாய்ந்து படிக்கட்டில் நின்று பார்த்தான். அவன் பறந்தேவிட்டான்.

அதற்கிடையில் அவர்கள் இருவரும் மெல்லமெல்ல ஏதோ கதைத்துக் கொண்டனர். இவனுடைய காது படுகூர்மையானதென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

நுரையீரல் பொதியோடு அவன் மீண்டும் சைக்கிளில் ஏறினான்.

அவர்கள் மெல்லக் கதைத்தது அவனது செவியிலே எதிரொலித்தது.

இறைச்சிக் கடைக்காரரென்றால் எல்லோருக்குமே ஒருவித பயம் தான். யாருமே அவர்களுடன் வாக்கு வாதங்களுக்குப் போவதில்லை. இரத்தம்- கத்தி- குத்து- வெட்டென்று நாளாந்தம் ஈடுபட்டு குரூரமாகிவிட்டார்களென்ற கணிப்பு. ஆனால் அவர்களுக்கும் இப்படி நல்ல மனசு இருக்கிறதேயென்று நினைத்து அவன் வியந்தான். உம்மாவின் நச்சரிப்புக்காக விருப்பமில்லாமல் தான் அவன் வந்தான். வந்தது அவனுக்கு நல்லதொரு அனுபவமாகவே அமைந்துவிட்டது.

வீட்டுக்கு வரும்போது ஆஸிமாமியும் உம்மாவும் அவனுக்காகவே காத்திருந்தனர். மற்ற வேலைகளெல்லாம் நிறைவடைந்திருந்தன.

"இந்தாங்கொ"- தொப்பென்று போட்டான்.

"இதெனா ஒரு கொட....... எவளவெடயன்?"- ஆஸிமாமி ஆச்சரியப் பட்டுக் கேட்டார்.

"நூறுருவடதான்"- அவனுக்கு என்னவென்று புரியவில்லை.

விரித்துப் பார்த்தபோது நுரையீரல், கொழுப்பிறைச்சி, ஸ்பு முள்ளு...... இப்படி.....

"இருநூறுருவ மட்டுப் பொறுமதீக்கி"- ஆஸிமாமி உடனே மதிப்பிட்டுச் சொன்னார்.

எல்லோருக்குமே ஆச்சரியம் தான்.

"ஒத்தரட கஷ்டம் இனுமொத்தருக்கு வெளங்கியல்ல....... ரெண்டு பேரும் சம்பளமெடுக்கியதான்.... பாவம் கொஞ்சம் நல்லாப் போட்டுக் குடு. இப்பிடி மொல்ல மொல்ல கதச்சிக் கதச்சித்தான் அவங்க போட்ட"

அவன் சொல்லி முடித்தானோ இல்லையோ உம்மா, ஆஸிமாமி, நஸ்மியா, ஸித்தி சாச்சி எல்லோருமே விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

சமையல் செய்து களைத்துப் போயிருந்தவர்களுக்கு நல்ல தெம்புதான்.

# இடைக்காலம்

மகளுக்கு வயது ஏழு. இரண்டாம் ஆண்டில் படிக்கிறாள். படுசுட்டியாக எதிலும் ஆர்வம் காட்டிவந்தாள்.

"வாப்பா ஏன்ட உம்ம எங்கியன்?" மகள் இப்படிக்கேட்டதை அவன் எதிர்பார்க்கவேயில்லை.

"உம்மவா அது நிக்கிய" தனது உம்மாவை அவன் காட்டினான்.

மகளும் இவ்வளவு நாளும் அவனது உம்மாவைத்தான் உம்மாவென்று சொல்லி வளர்ந்தாள். இப்பொழுதுதான் அவளுக்குப் புத்திதெளிகிறது போலும். பள்ளிக்கூடப் பிள்ளைகளின் சகவாசமும் அதை தூண்டியிருக்கலாம்.

"இல்ல ஏன்ட உம்மா"- மீண்டும் அழுத்தமாகவே கேட்டது அந்தப் பிஞ்சு.

"ஆ..... நான் ஒரு நாளக்கி புள்ளய உம்மாக்கிட்ட கூட்டிக்கொணுபோறன். வாங்க சோறு போட்டுத்தர"

மகளுக்கு உணவூட்ட ஏற்பாடு செய்தான் அவன்.

இனிப் பிரச்சினையின் வாயில் திறந்துவிட்டது. அதிலிருந்து அவன் தப்பவே முடியாது. உம்மாவின்- அவனது மனைவியின் கதையை அவளுக்கு எப்படித்தான் சொல்லமுடியும். சொல்லக்கூடிய கதையா அது! .

"எனக்குத் தெரீம்டா. என்டக்கிச் சரி ஒன்ட புள்ள அந்தக்

கேள்வியக் கேக்குமென்டு. நீ இனிமொரு கலியாணம் முடிச்சிருந்தா அந்தப் பொம்புளய உம்மாண்டு காட்டேலுமேன்" மகள் விளையாட்டில் விழுந்ததும் அவனது உம்மா ஆரம்பித்தாள்.

"சரி எப்பேக்குச்சரி தெரீமாகியதானே" அவன் சொன்னான்.

"நல்லா வெளங்கினாப் பொறகுதான் அப்படித் தெரீமாகிய. அந்த டைமுக்கு பிரச்சினில்ல.. சின்ன மனசியல்ல அந்தக் கவலவந்தா பாவமேன்"- மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்தாள்.

"கலியாணம் இனி புடிக்கியல்லயென்டு நான் எத்தின டைம் சென்ன. இந்த புள்ளய ஒழுங்கா வளத்துக்கொண்டா எனக்குப் போதும்"

"ஓ.... நீ செல்லிச் செல்லி நில்லு. நான் ஈக்கங்காட்டும் சரி. ஏன்ட மூச்சுப் போனாப் பொறப் புள்ளய தாரன் பாக்க ஈக்கிய. நடந்துபோன விஷயத்தியல யோசின பண்ணி வேலில்ல"

உம்மாவின் நச்சரிப்பை இனியும் கேட்கமுடியாமல் வீட்டிலிருந்து வெளியிறங்கி நடந்தான்.

மேல் பள்ளியில் அஸருக்கு பாங்கு சொல்வது கேட்டது.

தேத்தண்ணி கடையில் ஒரு பிளேன்ரியும் வடையும் சாப்பிட்டுவிட்டு கடற்கரைப் பக்கமாக நடந்தான். தென்னஞ்சோலைக்கூடாக நல்ல காற்றுப் பாய்ந்து வந்தது. அவனுக்கும் பரிச்சயமான கடல் ஆர்ப்பரித்து அவனை வரவேற்றது. குருத்து மணலிலே அவன் அமர்ந்து கொண்டான்.

ஏழோ, எட்டோ படித்துக் கொண்டிருந்தவன் அதனை இடைநடுவில் விட்டுவிட்டுத்தான் தொழில் செய்ய இறங்கினான்.

அவன் குடும்பத்துக்கு ஒரே பிள்ளை. வாப்பா மௌத்தாகிப் பல்லாண்டுகள். சொந்தவீடும் காணியும் அதனூடாக கொஞ்சவருமானமும் இருந்தது. உம்மாவுக்கு செல்லப்பிள்ளையா வும் நாளாந்த உழைப்பாளியாகவும் காலத்தை ஓட்டினான்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பொரு நாள்...

"கந்தளாயிலிருந்து ஒரு பஸிந்தான குட்டி வந்திருக்கிடா. ஒனக்குப் பேசியாங்க பாத்து ஒரு முடிவுசொல்லு"

உம்மா மிகுந்த விருப்பத்தோடு 'மாப்பிள்ளையின் உம்மா' என்ற ராங்கித்தனமில்லாமல் சொன்னது அவனுக்கு வியப்பாக இருந்தது.

"யோசிச்சி செல்லியன்" அப்போதைக்கு இப்படிச் சொன்னான்.

வேறு வகையிலும் அவனை நோக்கி அதிக விடயம் அவனைச் சுற்றிவளைக்கத்தான் செய்தது.

உம்மாவோடு இவ்வளவு காலமும் வாழ்ந்து, அந்தப் பெண் மௌத்தானபின் வேறு வழியின்றி, தூரத்து உறவான இங்குள்ள ஒரு வீட்டில் வந்து தங்கியுள்ளதாகவும் அறிந்தான்.

அழகான பிள்ளையென்பதால் வேறு பிரச்சினைகளுக்கு வழிவைக்காது அவசரமக உழைச்சுக் காப்பாற்றக் கூடிய ஒருவனுக்கு கட்டிவைப்பது நல்லதென்று சம்பந்தப்பட்டவர்கள் கருதுவதாகவும் அதற்குப் பொருத்தமானவனாகவும் அவனையே இனங்கண்டிருந்தார்கள்.

அந்தக் கிணற்றடியில் வைத்துத்தான் அவளை அவன் முதன்முதலில் கண்டான். பழகியவள்போல சிரித்துக் கதைத்தபடி நீரள்ளி மற்றவர்களுக்கு ஊற்றிக் கொண்டிருந்ததையும் பார்த்தபோது அவனுக்குப் பிடித்துப்போய்விட்டது.

ஆடம்பரமில்லாமல் அந்தத் திருமணம் நடந்தேறியது. அவள் மிக அன்பாகவும் அடக்கமாகவும் நடந்துகொண்டாள்.

'எனக்கு இப்பிடியொரு பொஞ்சாதியா?' அவனே அவனைக் கேட்டுக்கொண்டான்.

உற்றார் பெற்றார் நல்லெண்ணம் கொண்டவர்களெல்லாம் ஒரு நல்ல காரியத்தை செய்து முடித்ததாகத் திருப்திப்பட்டார்கள். இரண்டே நாளில் அவளுக்கு ஒரு மறுபக்கம் இருப்பதாக தெரிய ஆரம்பித்தது.

"என்ன மன்னிச்சிக்கோங்க...." அந்த நள்ளிரவில் அவள் அழுது அவன் காலடியில் விழுந்தாள்.

"நீங்க பயப்புடாமச் செல்லுங்கொ. உண்மயச் செல்லுங்கொ. நான் ஒங்களுக்குகொரு அநியாயமும் செய்யமாட்டான். கையுடமாட்டன்." அவன் சத்தியம் செய்தான்.

அவள் சொன்னாள்.

அவன் வாக்குமாறவில்லை.

அடுத்தநாள் கடைவீதிக்கு அழைத்துச் சென்றான். டாக்டரைச் சந்தித்தான்.

அதன் பெறுபேறு அவள் கர்ப்பம் தரித்துள்ளமை தெரிந்தது.

அவர்கள் இருவருக்குமே தெரிந்த ரகசியமாக அது இருந்தது.

ஏழே மாதத்தில் பெண்குழந்தையை அவள் பெற்றெடுத்தாள். ஏழு மாதத்திலும் குழந்தை கிடைப்பதால் அது ஊர்வாய்க்கு அவலாகவில்லை.

இருவரும் பரஸ்பரம் அன்போடுதான் அந்தக் குழந்தையைப் பராமரித்து வந்தார்கள். அது அவளுடைய குழந்தையாக இருந்தாலும் அவன் அதற்காக அலட்டிக் கொள்ளவில்லை.

குழந்தை மூன்று மாதத்தை எட்டி மொழுமொழுவென்று வளர்ந்து கொண்டிருந்தது. குழந்தையும் அவளைப் போலவே அழகாக வளர்ந்து வந்தது. பார்க்கவே ஆசையாக இருந்தது அவனுக்கு.

அன்றும் அவன் வழமைபோல தொழிலுக்குப் போனான். மாலையில் வீடுதிரும்பினான்.

வீட்டில் ஒருவித அசாதாரணம் அவனுக்கு விளங்கியது. இரண்டொருவர் மௌனமாக நடமாடிக் கொண்டிருந்தனர். உம்மாவின் மடியில் குழந்தை அழுது கொண்டிருந்தது.

"எனத்தியனும்மா" அவன் வியப்போடு கேட்டான்.

"வெளணேலிந்து அவளக் காணல்ல...." உம்மா சொன்னாள்.

"காணல்லயா...."

இப்போதுதான் அவனது மண்டைக்குள் புதியபடம் ரிலீஸாகி ஓட ஆரம்பித்தது.

அறைக்குள் சென்று சற்று என்ன செய்வதென்று யோசித்தான்.

மேசையிலே ஒரு துண்டு கிடந்தது அதிலே......

"என்ன விரும்பியவரோடு நான் போற தேடவாணா"

அசந்துபோனான் அவன்.

'சரி போ... ஒன்ட புள்ளய ஏன்ட புள்ளயா நான் வளத்துக் காட்டியன்' என்றெண்ணியவன் வந்து குழந்தையை எடுத்து மார்போடணைத்துக் கொண்டான். அது அமைதி கண்டது.

குழந்தையை வளர்த்து ஆளாக்குவதைத் தவிர வேறெந்த வாழ்க்கை இலக்குகளும் அவனுக்கிருக்கவில்லை.

கடல் ஓங்காரமாக ஓசையெழுப்பியது. அந்தக் கடலின் நண்பனல்லவா அவன். அவன் கதையை அந்தக் கடல் அறியாமலிருக்குமா....?

அவன் கடற்கரையிலிருந்து எழுந்து வீடு நோக்கி மெல்லமெல்ல நடந்தான்.

# உரிமைப் போராட்டம்

"பேப்பரில நல்லோரு கட்டுரீக்கி தாத்தா?" மரீனா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

அவளது சிரிப்புக்கு நிறைய அர்த்தமுண்டென்று அவளுக்குத் தெரியாதா என்ன?

"நானும் பாத்தீப்பனே"-

இப்பொழுதெல்லாம் நிஜாமுக்கு பேப்பர் பார்ப்பதைத் தவிர வேறென்ன வேலை கிடக்கிறது.

"நோம்புக்கு ஸ்கூல் வெக்கப் போறாம"

அவளைப் பொறுத்தமட்டில் அது சந்தோஷம்தான். அவள் நோன்பு வைத்துக் கொண்டும் வேலைக்குப் போகிறவளாயிற்றே.

"இதெல்லாம் எங்கியன் நடக்கிய. நடக்கேம் உடப்படாது... ம்... அது எங்கட உரிம...."

இவ்வளவு காலமும் அனுபவித்ததை இழக்க விரும்பாத ஆதங்கத்தில் கணவன் சொல்வது அவளுக்கு பிடிக்கவில்லைதான்.

"சரி அந்தக் காலத்தில அது ஏதோவொரு வகையில சரியா இருந்தீக்கும். இன்னக்கி எங்களுக்குத்தான் நட்டம்"

"ஒரு நட்டமுமில்ல. எல்லா அரசாங்கப் பாடசாலைகளுக்கும் பாடசாலை நாள் ஒரேயளவுதான்" ஒரேயடியாக போட்டு உடைத்தவிட்டதுபோல் ஒரு வெற்றிச் சிரிப்பு.

"பதினாறு காரணம் போட்டீக்கி. எல்லாத்தேம் உடுங்கொ. இப்ப ரெண்டு மாதம் லீவு குடுத்தீக்கி. டிசம்பரில சோதின... ம்... அப்ப நவம்பர் மாஸத்தேல புள்ளயளுக்கு படிக்கேலுமா. செமினார் எல்லாம் நடக்கிய இந்தக் காலத்திலதானே. எங்டக பொடியனியள் ஊர் சுத்தித் திரித...." அவள் பட்பட்டென்று விட்டுக்கொடுக்காமல் பொரிந்து தள்ளினாள்.

நிஜாம் திக்குமுக்காடிப் போனார். தான் நாளாந்தம் நோன்போடு கஷ்டப்படும் வேதனையின் வெளிப்பாடாக அவனுக்குப்பட்டது.

"இங்க பாருங்கொ.... மத்தமத்த முஸ்லிம் ஊழியருக்கு லீவு எடுத்துக்கொளத்தான் நாங்க தெண்டிக்கோணும்.... ம்.... இருக்கியத்த இல்லாமலாக்கியத்துக்கல்ல....."

"ஐயோ வாண. சும்ம சோம்பரப் போறதுக்கு ஒரு மணித்தியாலம் லீவு தாராது போதும். " அவள் தனத நிலைப்பாட்டை மெய்யாகவே பிரஸ்தாபித்தாள்.

இந்தக் கருத்து வளர்ச்சி எங்கும் வளர்ந்து கொண்டு போகலாமென்ற நியாயமான சந்தேகம் அவனுக்கு. இதற்கு இடம்கொடுக்கலாமா என்ன?

❋❋❋❋❋

டைம்பீஸ் அவளை மூன்றரைக்கே எழுப்பிவிட்டது.

அரிசியைக் கழுவி அடுப்பில் வைத்துவிட்டு கறிகளை சூடாக்கினாள். இனி விளாம்பழப் பாகு தயாரித்தால் சஹ்ர் சாப்பாடு சரி.

"ஆ... எழும்புங்கொ எழும்புங்கொ. நாலு மணியாகீட்டு"

"ஆ.... நாலுமணிதானே... இன்னம் டைமிக்கி"- எழும்பப் பஞ்சிப்பட்டார் நிஜாம்.

"ம்.... ஒங்களுக்கு படுக்கத்தானே லீவு தந்தீக்கி. கொஞ்சநேரம் எழும்பி குர்ஆனாலும் ஓதேலுமேன்"

"சரி சரி எழும்பியன்"

நிஜாம் வெகுண்டெழுந்து முகம் கழுவச் சென்றார்.

அதற்கிடையில் சாப்பாட்டு மேசையைத் தயார்ப்படுத்தினாள். நேரம் அப்படியும் இப்படியுமாக ஓடிக்கொண்டிருந்தது.

வழமையாக நாலரைக்குத்தான் மகனை எழுப்புவாள். அவன் பாவம் நோன்பு பிடித்துக்கொண்டு ஸ்கூல் வேனில் முப்பது கிலோமீற்றர் பயணம் செய்து பாடசாலைக்கு போய்த் திரும்பவேண்டும். வந்து சேரும்போது மாலை நான்கு மணியாகிவிடும்.

புலமைப் பரீட்சையில் சித்தியடைந்ததன் மூலம் நகர்ப்புற கல்லூரி தமிழ்பிரிவில் கல்விகற்கும் சந்தர்ப்பம் அவனுக்கு கிடைத்தது. சிங்களப் பாடசாலையென்பதால் நோன்பு லீவு இல்லை.

"நோம்பில நான் ஸ்கூலுக்குப் போறல்ல. ஊரில எல்லா புள்ளயலுக்கும் லீவு" நோன்பு ஆரம்பிக்குமுன்பே அவன் அலுத்துக்கொண்டான்.

"ரெனுமூனு நாளக்கி கொஞ்சம் கஷ்டம். அதூப்பொறகு எல்லம் சரி. உம்மாம் வேலக்கி போறதானே...." அவள் சமாளித்தாள்.

முதல் இரண்டொரு நாட்களாக வாடிப் போய்த்தான் அவன் வந்துசேர்ந்தான். அவள் சிரமப்பட்டு அவன் விரும்பும் சிற்றுண்டிகளை நாள் தவறாமல் நோன்பு திறந்ததும் செய்து கொடுத்தாள். பள்ளிக்கூட செலவுக் காசையும் நோன்பென்று கொடுக்காமல்விடவில்லை. அவளது திட்டமிட்ட நடவடிக்கைகள் கைமேல் பலன் கொடுக்கவே செய்தது.

"வாப்பக்கென்டா லீவும்மா...."

"ஓ.... ஒங்க வாப்பா சும்மா சோம்பறியனாப்போற. படுக்கியேம் பேப்பர் பாக்கியதும்தான் வேல"

"எங்கட மம்மதுஸேர், ஸாலி ஸேரெல்லாம் இஸ்கூலுக்கு வாரும்மா...."

"ஓ ஒங்கட வாப்பாவேம் சிங்களிஸ்கூலுக்கு மாத்துடோணும் புடிச்சி"

"ஓ.... உம்மா ஜாதிவேல" அவன் கைகொட்டிச் சிரித்தான்.

"எழும்புபுள்ள எழும்பு.... நாலறயாகீட்டு" மகனை எழுப்பத் தொடங்கினாள் அவள்.

அவன் கொஞ்சநேரம் உருண்டு புரள்வான். சுருண்டு பாடுப்பான். அவள் தொடர்ந்து எழுப்புவாள். பக்கத்திலே அமர்ந்து முதுகைத் தடவிக் கொடுப்பாள். ஆறாம் தரத்தில் படிக்கும் பதினொரு வயதுப் பாலகனல்லவா அவன்.

"புழாங்கப்பால் புழிஞ்சீக்கி. வாப்பாம் சோறு தின்னிய எழும்புங்கொ"

அவன் துள்ளி எழுந்துவிட்டான். சுடுசுடுவென்று தனது காரியங்களைச் செய்து கொள்வதில் சமர்த்தன்.

மூவரும் சாப்பிட்ட பின் அவன், பேக்கையும் முதுகிலே போட்டுக்கொண்டான்.

"பேம் பே"

வழமைபோல் ஐந்தரைக்கு வேன் அழைப்புவிடுத்தது. அவன் துள்ளியோடினான்.

பீங்கான் கோப்பை, சட்டி பானை கழுவுதல் முதலான வேலைகள் முதல் வீடு பெருக்கல் இப்படி அவளுக்கு எத்தனை வேலைகள். இடையில் கொஞ்சம் நித்திரையாகினாள், அலுப்புப்

பிடித்துவிடும். அதனால் ஏதாவது வேல செய்தே எட்டுமணிவரை நேரத்தைப் போக்குவாள்.

இத்தனைக்கும் சுபஹு" தொழுதுவிட்டு நிஜாம் மீண்டும் நித்திரையாகிவிடுவார். அது பத்துமணிவரை தொடரும்.

அதற்குப் பிறகுதான் கஞ்சிக்கிலை, கறிகாய், முதலியவற்றை வாங்கிவருவார். அதொன்றுதான் அவருக்குரிய வேலை.

"சும்மாதானே நிக்கியா. இந்தக் கீரய கொஞ்சம் வெளிசாக்கி வெக்கீந்தேன்"- ஒருநாள் இப்படி அவள் விளையாட்டு வாக்கில் சொல்லிவிட்டார்.

ஒரு பாய்ச்சல் பாய்ந்து விழுந்தார். அதற்குப்பிறகு அவள் வாயே திறப்பதில்லை.

நான்கு மணிக்கெல்லாம் அவள் அலுவலகத்திலிருந்து திரும்பிவிடுவாள். அதோடு சமையல் வேலை ஆரம்பித்துவிடும்.

அவள் காலைவேலைகளை முடிக்கும்போது எட்டுமணி நெருங்கிவிட்டது.

உடுத்தி தயார்படுத்திக் கொண்டு வெளியேறி வெளிக் கதவைப் பூட்டி இடைவெளியால் ஜன்னலுக்குள் திறப்பைப் போட்டுவிட்டு புறப்பட்டாள்.

❁❁❁❁❁

நோன்பு திறந்தால் தாரவீற் தொழுகைக்குப் போவதற்கிடையில் நிஜாமின் ஆசிரிய நண்பர் அந்தப் பக்கமாக வந்து பலதும் பத்தையும் கதைப்பது வழக்கம்.

"ஆ வாங்க வாங்கொ"

கணவனின் குரல் அவரது நண்பர்கள் வருகிறார்களென்பதை தெளிவாக்கியது.

இனி பிளேன்ரியோ கூல்ரிங்ஸோ தயாரிக்கவேண்டுமென்பது அவளுக்குத் தெரிந்தது.

"நிஜாம் பேப்பர் பாத்தா. அடுத்த வருஷம் ஊட்டில் நிக்கக் கெடக்காது. ஸ்கூல்தான்...."

"இங்க பாருங்கொ இதெல்லாம் சரிவராது. இத இப்பவே வெட்டிப் போடோணும்"

"அதென்டா உண்மதான்" இன்னொருவர் அழுத்தினார்.

"எங்கட சங்கத்தால் எழுதோம். இது எங்கட உரிம. நோம்புலீவில கைவைக்காதேன்னு.... இப்பவே எழுதோம். இந்தாதாளும் பேணேம் தாரன்" நிஜாம் துணிந்துவிட்டார்.

அவள் உள்ளுக்குள் சிரித்தாள்.

# சைக்கிள்

"பைஸ்கால் வாங்கிக் கேட்டு அவனால தப்பேல. அவன் கிளாஸுக்கு போறல்லயாம். கூட்டாளிக்கான்ட பைஸ்கால்ல பொகச் செல்லே அவனுக்கு நடந்து பொகேலுமா? கஷ்டமென்டு எனத்த செய்யவன். புள்ளயளுக்குத்தானே நாங்க எல்லம் செய்த......."- வந்ததும் வராததுமாக அவள் பாடியது புதிய பல்லவியல்ல!

"அவனுக்கல்ல எனக்கும் பைஸ்காலொன்டிந்தா எவளவு லேசன். சந்திக்கிப் போறென்டாலும் கடக்கிப் போறென்டாலும் கால் தோல் தேயங்காட்டிம் நடக்கோணும். ம்...... எட்டுப் பத்தாயிரமில்லாம இந்தக் காலத்தில பைஸ்காலொன்டு வாங்கேலுமா?"- காதர் நானாவும் விட்டுக் கொடுக்கவில்லை.

ஒன்றும் சொல்லாமல் மனைவி உள்ளே போய்விட்டாள். அவர் மனதில் அது தொடர்பான சிந்தனையோட்டம் நின்று விடவில்லை. விறாந்தைச் சாய் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

வேலிக் கதியல் மரங்களிலே அணில்கள் துள்ளியோடி விளையாடின. வேலிகள் இற்றுப்போய் மறுபக்கக் காட்சிகளை துலாம்பரப் படுத்தின. திருத்த வேலைகளுக்கென்று என்றோ கொண்டு வந்து கொட்டியிருந்த மண் குவியல், மழைக்கும் பிள்ளைகளின் விளையாட்டுக்கும் இடம் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாய் சரிந்து கொண்டிருந்தது.

மகனும் கண்ணுக்குத் தெரியாமல் வளர்ந்து இந்த வருஷம் சோதனை எடுக்கிறானாம். சைக்கிள் வேண்டித் தராவிட்டால்

சோதனையெழுத மாட்டேன் என்று மாத்திரம் சொல்லாதது அவருக்கு சற்றே ஆறுதல்.

காதர் நானா தினாந்தரம் சம்பளம் பெறும் பிடவைக் கடைச் சிப்பந்தி. அதற்குள் தான் நாளோட்ட வேண்டும். நசல் நறுக்கு பார்க்க வேண்டும். வாழ்க்கைப் போக்கில் ஏற்படும் நல்லது கெட்டதை யெல்லாம் சமாளிக்க வேண்டும்.

சின்ன வயதில் மகனுக்கு மூன்று சக்கர வண்டியொன்று கூட வாங்கிக் கொடுத்ததில்லை. ஒருமுறை தங்கச்சி வீட்டுக்குச் சென்றபோது அங்கிருந்த சைக்கிளிலிருந்து இறங்காமல் அடம் பிடித் தைப் பார்த்து, அவர்களது மூத்த மகனின் உடைந்த சைக்கிளைத் தூசு தட்டிக் கொடுத்தார்கள். தகரக் கடையில் ஈயம் பிடித்து இரண்டு மூன்று மாதம் ஓடியுடைந்து எறிந்ததோடு சரி.

"இந்தாங்க நீங்க சென்னேன் மாஸம் மாஸம் கெட்டியத்துக்கு எடுக்கேலுமெண்டு. இவடத்தில ஆயிரத்தைநூறு ஈக்கி...... எப்பிடிச்சரி மாஸம் மாஸம் குடுப்போம்"

அவள் கொண்டு வந்து நீட்டிய போது அவர் எதிர்பார்க்கவே யில்லை. அதற்குமேல் கேள்வி எழுப்பினால் அவளுக்குக் கோபம் வந்துவிடும்.

சைக்கிள் வாங்கிவிட்ட பூரிப்போடு அவர் தெருவிறங்கி நடந்தார். பெரும் சாதனையொன்றை நிலைநாட்ட முற்படும் வீரர் போன்ற உணர்வு.

மகன் எதிர்பார்க்குமளவில் புதுச் சைக்கிளொன்று வாங்குவதா யின் எப்படியும் எட்டுப்பத்து இல்லாமல் முடியாது. அதனால் அவன் டவுன் பக்கத்தை நினைக்கவேயில்லை.

விங்கல் கடை வைத்துப் படிப்படியாக முன்னேறி, இப்பொழுது அரைப் பழசுகளை, உடைந்தவைகளை வாங்கி, புதுப்பித்து விற்கும் தாஹிர் நானாவின் சைக்கிள் கடைதான் அவரது இலக்காக விருந்தது.

"இது வாங்கி மூனு மாஸம் பாவிச்ச பைஸ்கால். சல்லி ஹதிஸ்ஸிக்கி வித்திட்டுப் போன. புத்தப் புதுசி மாதிரி ரெபியார் பண்ணித்தாரன். தலப்புக்கு ரெண்டு தாங்கொ. மாஸம் மாஸம் அயிரமாயிரம் தந்தா கதசரி. எனத்தியன் செல்லிய? யோசிச்சு யோசிச்சு நின்டா ஒங்களுக்கு வாங்கக் கெடக்கியல்ல"

இரண்டு மாதத்திற்கு முன் விசாரித்த போது ஒரு சைக்கிளைக் காட்டி இப்படிச் சொன்னது காதருக்கு இன்னும் நல்ல ஞாபகம்.

"ஆ....... வாங்கொ வாங்கொ. நீங்க வந்து பாத்திட்டுப் போனாப் பொறகு நான் நாலு பைஸ்கால் வித்திட்டன். இன்னம் ரெண்டீக்கி. எனத்தியன் செல்லிய?"

காதர் சிரித்து இம்முறை தான் தயாராக வந்துள்ளதை மெய்ப்பித்தார்.

"ம் எந்தநாளும் கேட்டுக் கேட்டு நிக்கேலுமா? ஒரு நாளக்கி எடுக்கோணும் தானே"

"இது புத்தப் புதிசி.... ரேஸிங் பைஸ்கால். பொடியன் புழுந்து கையொடச்சிக் கொண்டாமென்டு தந்திட்டுப் போற வித்துச் சல்லி தரட்டாம் . நல்லமெனா?"

பார்த்த பார்வைக்கே அவருக்குப் பிடித்துவிட்டது. கொஞ்சம் உருட்டி பிரேக் பிடித்துப் பார்த்தார்.

"காதர் நானா..... நீங்க ஏறிப் போனா பொடியன்மாரு கைதட்டிச் சிரிக்கியொன்டும்.......ம்...."

"ஓ........ஓ........"

"சரி நாளக்கி வாங்கொ. கொறபாடீந்தா சரிபண்ணி....... பொலிஷ் பண்ணி........ மாப்பிளமாதிரி வெக்கியன். எவளவு சரி தந்திட்டுப் போனா நல்லம்"- பைஸ்கால்தாஹிர் வியாபாரப் பாணியில் விட்டுக் கொடுக்காமல் பேசினார்.

"இந்தாங்கொ"- ஆயிரத்தைநூறை நீட்டினார் காதர்.

"இதெனா ஒடஞ்ச கணக்கு. இனமொரு ஐநூறத்தாங்கொ....."

"அவ்வளவுதானீக்கி"

"சரி சரி மாஸம் மாஸம் ஆயிரம். நாலாம் மாஸம் ஆயிரத்தைநூறு சரிதானே....... மறுபேணம் அனம்மனம் பேசவாண"

சைக்கிளை வாங்கினாரோ இல்லையோ விமானத்தில் பறப்பது போலிருந்தது அவருக்கு. வழிபார்த்துக் காத்திருக்கும் மனைவியின் முகமும், விஷயத்தைச் சொன்னதும் மகன் அடையப் போகும் மகிழ்ச்சிப் பெருமிதமும் மாறி மாறி அவர் மனதிலே தோன்றின.

❁❁❁❁❁

பள்ளிக்கூடம் விட்டு வந்த ஆதீல் வீட்டுக்கு வரும்போது வாசலில் புதுச் சைக்கிள் நின்றது. சிவப்பு நிறம். ரேஸிங். வீட்டுக்கு யாரும் வந்திருக்கிறார்களாவென்று வேவு பார்த்தான். அப்படியெதுவு மில்லை. அவன் மகிழ்ச்சியில் பூரித்துப் போனான். நாலைந்து வருடமாகவே அவன் கேட்டுக் கேட்டுக் கரைந்த விடயம் தான்.

"எப்பிடியன் பைஸ்கால் நல்லமா?" உம்மாதான் கேட்டாள்.

"நல்லம் நல்லம். ஓட்டிப் பாக்கவா?"- ஆதில் பேக்கை வைத்தபடி கேட்டான்.

"வாண வாண சோத்தத் தின்டிட்டு ஓட்டேலேன்"

அவன் அவசர அவசரமாக முகம் கழுவிக் கொண்டு வந்து சாப்பிட ஆரம்பித்தான்.

"ஆறாயிரமென்டா லேசா. வாப்ப கடன் பட்டுத்தான் எடுத்தீக்கி. அன்ன கவனமா பாவிக்கோணும். காட்டில மேட்டில ஓடித்திரியாம"

"நான் ஜாதியா பாவிக்கியனும்மா"

டக்பக்கென்று சாப்பிட்டுவிட்டு அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே பாய்ந்தான். ஒரு ரவுன் சுற்றி விட்டு வந்த போது அவனுக்கு எல்லாமே திருப்திதான்.

"ட்றிங் ட்றிங்"

வழமைபோல் கிளாஸ் போகும் நண்பர்களின் அழைப்பு. யாராவது ஒருவரின் சைக்கிளில் ஏறிக் கொண்டு தான் இவ்வளவு நாளும் அவன் பள்ளிக்கூடத்திற்கும் கிளாஸுக்கும் பயணித்தான். இன்று ஆதிலும் அவர்களோடு சரிநிகர் சமானமாக.....

"ஹாய் ரேஸிங் பைஸ்கிள்"

முதலில் ஆச்சரியப்பட்டு பின்னர் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

"இன்டக்கி கிளாஸ் முடிஞ்சி ஒரு ரவுன் அடிப்போம்டா......"

நாலரைக்கே கிளாஸ் முடிந்துவிட்டது.

சைக்கிள் சவாரி ஆரம்பித்தது. பெரிய கடை, குடாவெல்ல, புளிய மரத்தடி, வலிஹிடி, பால்வத்த, களப்படி வழியாக மீண்டும்

பெரிய கடைக்கு வந்து சமீர் ஹோட்டலில் சுடச்சுட அப்பம் சாப்பிட்டார்கள்.

வயிற்றை நிறைத்துக் கொண்டு ஐந்து பேரும் வெளியிறங்கும் போது நன்கு இருட்டிவிட்டது. நல்ல பிள்ளைகள் போல் மஃரிபு தொழுகைக்கு பள்ளிவாசலுக்கு வந்து சேர்ந்தனர்.

"ம் இன்டக்கே சுத்தத் தொடங்கீட்ட. கிளாஸ் முடிஞ்சி அஞ்சி மணிக்கு ஊட்டுக்கு வாரபுள்ள. இப்ப எத்தின மனியன்?"- உம்மாவின் கேள்வியில் நியாயமிருந்தது.

"இன்டக்கி மட்டுந்தான்"- அவன் அதட்டிச் சமாளித்துவிட்டான்.

வாப்பா இன்னும் வரவில்லை.

❀❀❀❀❀

ஒரு மாதம் கடந்து விட்டது. எந்தப் பிரச்சினையுமில்லாமல் சைக்கிள் பிள்ளைபோல் இயங்கியது. அதைப் பராமரிப்பதில் ஆதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டான். கழுவித் துடைப்பான், எண்ணெயிடுவான், பிரேக் கட்டைகளைச் சரிபார்ப்பான்.

இவ்வளவு காலமும் அவன் நண்பர்களின் சைக்கிள்களின் பாரிலோ, கெரியரிலோ ஏறியமர்ந்து பயணித்தான். அதையொரு பொருட்டாக அவன் கருதியதில்லை. ஆனால் அவனுடைய சைக்கிளில் யாராவது ஏறினால், தன்னுடைய முதுகில் ஏறிவிட்டது போல் அவனுக்குக் கோபம் வரும். அதற்காக என்ன செய்யமுடியும்?

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி முதல்மாத கட்டணம் ஆயிரம் ரூபாவை காதர் நானா கட்டிவிட்டார்.

அன்று சனிக்கிழமையென்பதால் ஆதில் சற்று ஓய்வாக வீட்டிலிருந்தான்.

யாரோ உள்ளே வருவது தெரிந்தது. அடுத்த வீட்டு அஜ்மல நானா தான். என்னவென்றறிய உம்மாதான் வாசற்படிக்குச் சென்றாள்.

"மகளுக்கு காச்சல் மேல்கை நோவு"

"இனியினி"

"மருந்தெடுத்த....... பாமஸிக்கி துண்டு தந்தீக்கி. ஆதில்ட பைஸ்காலக் கொஞ்சம் எடுக்கேலுமா........?"

இவ்வளவும் சொன்னபின் நோயாளிக்கு உதவாமலிருக்க முடியுமா?

"மகன் பைஸ்கால்க் கொஞ்சம் கேக்கிய"

"ஆ தொறப்பு மேசே லாச்சீல......"

ஆதிலுக்கு மூக்கு நுனியில் மெல்லிய கோபம். ஒரு தடவையோடு இது முடியப்போவதில்லையென்று அவனுக்குத் தெரியும். அவன் வீட்டிலிருக்கும் நேரம் பார்த்து ஒவ்வொருவருக்கும் முக்கிய தேவைகள் வந்துவிடும்.

"இது சரிவாரல்லும்மா"

"எந்த நாளும் கேக்கியல்லேன். ஆபத்துக்கு அந்தரத்துக்கு அசல் மனிசர்தானே எங்களுக்கும் ஒதவிய " உம்மா சமாளிப்புப் பேசினாள்.

❋❋❋❋❋

நித்திரை விழிக்கும் போது ஆதிலுக்கு இரவுச் சம்பவமே நினைவுக்கு வந்தது. டக்கென்றெழுந்து எட்டிப் பார்த்தபோது சைக் கிள் சுவரோரமாகக் காணப்பட்டது. மீண்டும் கட்டிலில் புரண்டான்.

சைக்கிளுக்கு இரண்டு மாதமாகிவிட்டது.

இதுவரை எந்தக் குழப்படிகளும் இல்லை. ஒரு தடவையேனும் காற்றுப் போனது கூடக் கிடையாது. அவனாகப் பார்த்துப் பார்த்துக் காற்றடித்துக் கொள்வான். சைக்கிளுக்கு அது செய்தேன் இது செய்தேன் என்று நண்பர்கள் சொல்லும்போது அவனுக்கு வியப்பாகத் தோன்றும்.

"புள்ள எழும்பு ஸ்கூலுக்குப் பொகோணும்"

மகனை எழுப்பிவிட்டு, காலைச் சாப்பாடு தயாரித்து பெட்டியில் போட்டு முன்னே எடுத்து வரும்போது அவன் பேக்கைக் கழுத்தில் போட்டபடி நின்றான். மகனை வெளியே அனுப்பிவிட்டுக் கடவையை மூடவேண்டுமல்லவா?

சைக்கிளைத் திறந்து தள்ளியவன் பட்டென்று குனிந்து பின் டயரைப் பார்த்தான். கைகளால் தொட்டுத் தொட்டுப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டான்.

"உம்மா பெச்சாகி........"முகத்தில் கோபக் கொதிப்பு.

"ராவு சின்னமாமதானே கொணந்து வெச்ச"- அவள் ஞாபகப்ப டுத்திச் சொன்னாள்.

"சின்னமாம சரி பெரிய மாம சரி பெச்சாக்கி பேசாம கொணுவந்து வெச்சீக்கி.....ம்...... இது பெரிய கரச்சலொன்டு"

சைக்கிளை சுவருக்குச் சாத்தி வைத்துவிட்டு ஆதில் புத்தகப்பையோடு வெளியே பாய்ந்தான்.

*****

சைக்கிள் வேண்டி மூன்று மாதமாகும் போது ஆதில் அந்த ஒழுங் கையில் எல்லோருக்கும் தெரிந்த ஒருவனாக பிரபல்யமாகிவிட்டான்.

ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒருவராவது சைக்கிள் இரவல் வாங்காமல் விடுவதில்லை. சைக்கிளில் தனியே வருவது போவ தைக் கண்டால் எவராவது தொத்திக் கொள்ளாமல் விடுவதில்லை.

ஒருமுறை ஸ்போக் கம்பியொன்று உடைந்திருந்தது. இன்னொரு முறை மட்காட் வளைந்திருந்தது. இப்படி ஏதாவது நடந்தால் அதை யாருமே சொல்லி வருத்தம் தெரிவிப்பதில்லை. அவன்தான் பட்டுமாள வேண்டும். விங்கில்காரர்கள் தொட்டதுக்கெல்லாம் காசென்று வேறு நிற்பார்கள்.

"ஒம்பது மணிக்கி கிளாஸ். இன்னேம் வரல்லேன்"

"பாருங்கொ பாக்க நான் வழிக்கு வழி செல்லிக் குடுத்து....... ஒம்பது மணிக்கி முந்தி வரச்செல்லி, இவனுக்குப் படிக்கப் பொகத்தானே, நாங்க கஷ்டத்தோட கஷ்டமா வாங்கிக் குடுத்த"

"நான் போற" ஆதில் போய்விட்டான்.

பத்து மணிக்கு வந்து நியாயப்படுத்தி என்ன பிரயோசனம்.

*****

நிம்மதியும் பிரச்சினையும் ஒன்றோடொன்று முட்டி மோதும் நிலையில் காதர். இந்த மாதம் காசு கொடுத்துவிட்டால் இனி நிம்மதி

தான். வழமையை விட ஐநூறு ரூபா கூடுதலாகக் கொடுக்க வேண்டு மேயென்பது பிரச்சினை. எதற்கும் மனைவியோடு மசூராப் பண்ண வேண்டுமே.

"எனத்தியன் யோசின......? வந்ததாலும் தெரிய"- என்றபடி மனைவியும் வந்து சேர்ந்தாள்.

விறாந்தையில் இருவரும் அமர்ந்து கொண்டனர். கதியல் மரங்க ளும் இற்றுப் போன வேலியும் முற்றத்து மண் குவியலும் அவர்க ளுக்கு வழமையான காட்சிகள்.

"இந்த மாஸம் ஆயிரத்தைநூறு குடுத்தா பைஸ்கால் பிரச்சின முடிஞ்சி. நல்ல காலம் நோய் நசல்...... வேற தேவயள் வரல்ல......ம்.... எப்படிச் சரி ஐநூறுக்கு வழி பாக்கோணும்"- காதர் நானா யதார்த்த அறிக்கையை சமர்ப்பித்தார்.

அவளுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. முன் திட்ட மும் இருக்கவில்லை. யாரிடம் கடன் கேட்பதென்றும் யோசிக்க முடியவில்லை.

அப்போது கடவையைத் திறந்து கொண்டு ஆதில் புகுந்தான்.

"எங்கியன் மகன் பைஸ்கால்"- வாப்பா வியந்து கேட்டார்.

"பெச்சாகொண்டு"- மனைவி ஊகித்துச் சொன்னாள்.

அவன் ஒருவிதமாகச் சிரித்துவிட்டு ஆரம்பித்தான்.

"பைஸ்காலால பெரிய கரச்சல் வாப்பா. அதவிக்கச் செல்ல கடே குடுத்திட்டு வாரிது. நான் முந்தியப் போல கூட்டாளிமாரட பைஸ் கால்ல போறன். பைஸ்கால் தாஹிர் நான வாப்பாவ வரச்சென்ன......"

சொல்லிவிட்டு ஆதில் உள்ளே சென்றபோது இருவரும் முகத்தை முகம் பார்த்துக் கொண்டனர்.

சற்று நேரத்தில் இறங்கி நடக்கத் தொடங்கினார் காதர்.

ஆயிரத்து ஐநூறு ரூபாப் பிரச்சினை ஒரேயடியாக தீர்ந்துவிட்ட நிம்மதி ஒரு பக்கம். கணக்குப் பார்த்தால் கொஞ்சம் காசு கைக்கு வருமென்ற மகிழ்ச்சி மறுபக்கம்.

'இருந்தாலும் கரச்சல்....இல்லாட்டிம் கரச்சல்...மகனுக்கு வௌங் கீட்டு' இப்படி நினைத்தபடி நடந்து கொண்டிருந்தார் அவர்.

# விடிவு

பர்ஸானாவின் கைத்தொலைபேசி அலறியது. சட்டென்று இலக்கத்தை அவளது கண்கள் நோட்டமிட்டன. பொருத்தமில்லை, ஆசிப்தான். அவனைக் காதலன் என்பதா? அந்த வார்த்தையென் றால் 'அவளை விரும்புகின்றவன்' என்றுதான் சொல்ல வேண்டும். சரி எப்படிச் சொன்னால் தான் என்ன?

ஆசிபின் நெடிதுயர்ந்த தோற்றமும் அலை முடியும் குறுந்தாடி முகமும் அவள் கண்களுக்குள் பளிச் பளிச்சென்று மின்னின. பாட சாலை நாட்களை நினைத்துப் பார்த்தாள். அவளை விட இரண்டொரு வகுப்பு மேலே தான் படித்தான். விளையாட்டுக்களில் பெரிய வீரன்.

கைபேசி தன் கதறலை விட்டபாடில்லை. ஒரு கணம் இந்த உலகையே அவள் மறந்து தான் போயிருந்தாள். ஒருமுறை அங்கு மிங்கும் பார்த்துவிட்டு......

"ஹலோ......"

"ம் நல்ல தூக்கம் போலீக்கி"

"தூக்கமா தாருக்கன்?"

"சரி சரி எனத்தியன் நெலம?"

"அப்பிடியே தான் மாத்தமில்ல....."

"மாறமாட்டாங்க..... எங்கட உம்மாம் ஒரே புடியா நிக்கியா..... இவங்கள திருத்தேல பர்ஸானா"

"துஆச் செஞ்சிக்கோங்கொ.... இன்ஷா அல்லா ஹைறாகோணும்"

"ம்ம்...... வெக்கியன்"

ஒவ்வொரு நாளும் எடுத்து இப்படி எதையாவது கதைப்பதே அவளுக்குப் பெரிய ஆறுதல் தான்.

அவள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத காரியம் கைகூடி வந்திருந்தது. அவளுக்கு மிகுந்த கூச்சமாகவும் வெட்கமாகவு மிருந்தது. அவள் தனது சகோதரியிடம் அதைச் சொல்லியாக வேண் டும். அவளுக்கு உம்மா, வாப்பா கூட இல்லையே. இதை அறிந்ததும் சகோதரி எப்படிச் சந்தோஷமடைவாளென அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

இருபத்தைந்து வயதிலேயே விதவையாகிப் போனவள் தான் பர்ஸானாவென்றால் அதை யார் தான் நம்பப் போகிறார்கள்? இவளுக்கு இன்னமும் திருமணமே ஆகவில்லை என்றால் அதை யார் தான் நம்பாமலிருக்கப் போகிறார்கள்? அப்படியொரு இளமை..... அழகு.... நேர்சீரான உடல்வாகு.

ஆசிப் தனது விருப்பத்தை எப்படிச் சொல்வதென்று யோசித்து யோசித்து வெட்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, மின்னாமல் முழங் காமல் அவளுக்கு கல்யாணமாகிவிட்ட செய்திதான் ஓர் அதி காலைப் பொழுதில் சோக ராகமாய் அவன் செவியில் வந்து மோதியது.

அவன் அதிர்ந்துதான் போனான். அதிலிருந்து அவன் மீண்டெ ழுவதற்கு முன் எப்படி ஐந்து வருடங்கள் பறந்தோடி, அவள் விதவை யாகிப் புதுப் பெண்ணாய் அவன் முன் வந்து நின்றாள்.

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் அவளுக்கு வாய்த்ததை பெரிய அதிர்ஷ்டமென்றுதான் உற்றார் உறவினர்கள் சொன்னார்கள். தனக்கு நல்லதொரு வாழ்வை அமைத்துத் தர தாத்தாவும் மச்சானும் படும் சிரமத்தை மௌனமாக அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம். யார் எவர் எப்படிப்பட்டவரென்பதெல்லாம் கழுத்தில் தாலி ஏறிய பின்பே அவளுக்குத் தெரிய வந்தது. மேலும் சொல்வதென்றால் முப்பத்தைந்து வயதுவரை அவருக்கு ஏன் திருமணமாகவில்லை யென்பதையும் அவள் தெரிந்து கொள்ள ஆக மூன்று மாதங்களுக்கு மேல் தேவைப்படவில்லை.

வெளி உலகுக்கு மனைவியாகவும் உள்ளே ஒரு தாதியாகவுமே

அவள் ஐந்து வருடங்களைக் கடத்தினாள். மழை, காற்று, குளிர் என்றால் அவருக்கு இளைப்பு வந்துவிடும். அநேகமாக இரவு வேளையில் தான் இந்த நிலையேற்படும். எல்லா மருந்துகளும் தயார் நிலையிலிருந்ததால், ஏறி இறங்கி சுமுகநிலைக்கு வர அதிக நேரமெடுக்காது.

பர்ஸானாவுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டுவதற்கான சாத்தியம் எதுவும் தென்படவேயில்லை. ஆனால் தாத்தாவின் மூன்று பிள்ளை களையும் அன்றும் சரி இன்றும் சரி அவளே தாயாக நின்று வளர்த்தாள்.

கணவன் மௌத்தானபின் இன்னொரு திருமணம் செய்துதர வேண்டுமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. அது அவர்களால் முடிகிற காரியமாகவும் தெரியவில்லை. அதற்கேற்ற விதமாக பர்ஸானா தன் மனதை சரிப்படுத்திக் கொண்டுவருவகையில் தான் ஆசிப்பின் இந்த விண்ணப்பம் அவளை ஒரு குலுக்குக் குலுக்கியது.

❁❁❁❁❁

தாத்தா அடையப் போகும் சந்தோஷத்தை அமோகமாகக் கற்பனை பண்ணிப் பண்ணித்தான் பர்ஸானா அதனை எடுத்துச் சொன்னாள். ஆயிரம் குண்டுகள் இப்படி ஒரேயடியாக வெடிக்கு மென்று யார் தான் நம்பியது?

"இத்தா முடிஞ்சு மூணு மாஸமாகல்ல அதுக்குள்ள ஒனக்கு மாப்பிள தேவப்பட்டா...... வெக்கமில்லயா வாயத் தொறந்து செல்லி யத்துக்கு..... சீதேவியான மனிசனோட வாழ்ந்திட்டு இப்பிடிப்பட்ட போக்கிரியள நெனச்சிப் பாக்கேலுமா ஒனக்கு?"

பர்ஸானா ஒன்றுமே பேசவில்லை. தாயைப் போல நேசித்தவளை போஷித்தவளை எதிர்த்துப் பேச அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. ஏற்கனவே விஷயத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு தான் இப்படிக் கொதிக்கிறாள் என்பது மாத்திரம் அவளுக்கு உறுதி.

யதார்த்தம் அவளுக்கு ஆதரவாக இருக்கவில்லை.

தாய்வழி வீட்டுக்கு அவர்கள் இருவருமே சொந்தக்காரர்கள். தாத் தாவை விட்டால் அவளுக்கு தஞ்சம் வேறு யாருமில்லை. அவளைப் பகைத்து கொள்வது இப்போதைக்கு இந்த உலகத்தைப் பகைத்துக் கொள்வதற்குச் சமன்.

தாத்தா இல்லாத நேரம் பார்த்து ஆசிபுடன் கைபேசியில் கதைத்துக் கொள்வதுதான் அவளுக்குள்ள ஒரே நிம்மதி.

எதையாவது இழுத்துப் போட்டு கத்தித் தொலைப்பதே தாத்தாவுக்கு வேலையாகிப் போய்விட்டது.

"நாங்க செல்லிய மாதிரி கேட்டாத் தான் ஒனக்கிங்க நிக்கேலும். நெனச்ச மூப்புக்கு நடக்கியென்டா ஊட்டுப் பங்கேம் தாரல்ல...... எனக்கு ரெண்டு பொம்புளப் புள்ளயலீக்கி"

வீடு பற்றி பர்ஸானா என்றும் கதைத்ததுமில்லை, பங்கு கேட்டதுமில்லை. தாத்தா தந்தாலென்ன தராவிட்டாலென்ன? சட்டப் பிரகாரம் அவளுக்கு அரைப் பங்குண்டென்பது அவளுக்குத் தெளிவாகவே தெரிந்த விடயம் தான்.

"அந்த மனிசன் சொர்க்கவாதியாப் பொகோணும். அவரட பென்ஷன் சொர சொரன்டு ஒன்க்கு இருவதினாயிரம் கெடக்கிய...... ம்.... கண்ண மூடங்காட்டீம் தீன்தண்ணிக்கி ஒனக்கொரு கரச்சலு மில்ல. இனுமொரு கலியாணம் முடிச்சி அத இல்லாமலாக்கி கொளப் பாக்கியா?"

பென்ஷன் பற்றி அவள் கணக்குப் பார்த்ததே கிடையாதே. ஒரு சதத்தைக் கூடத் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் அந்த வீட்டுக்கு அதனை செவழித்து வருகிறாள். அந்த மனிதனோடு வாழ்ந்து ஒரு சந்தோஷத்தையும் காணாதவளுக்கு, அவரது பென்ஷனால் என்ன சந்தோஷத்தைத் தான் கண்டுவிட முடியும்?

"அடி நீ கொமரு காலத்தில மதிப்பு மருவாரியா ஈந்திட்டு...... கலி யாண முடிச்சி வாழ்ந்திட்டு இப்ப இந்தக் கூத்துப் போடிய....... மனிசரு ஒன்னக் கணக்கெடுக்கியா.....? அந்த மனிசன்ட ஹயாத்துக் கொறஞ்ஜி மௌத்தாப் போனத்துக்கு தாருக்காலுமொரு அசட்டில்லாம வாழந்த மனிசன்.... அந்த மனிசன்ட மொகத்துக்கு கொஞ்சங் காலம் பொறு......."

யாருடைய கௌரவத்தையும் குறைப்பது அவளுடைய நோக்கமாக இருக்கவில்லை. தன்னைத் தேடி வந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவே அவள் பார்த்தாள். தன்னை இப்படி வைத்துக் கொண்டு தங்களது காரியத்தைக் கொண்டு போக தாத்தாவும் மச்சானும் திட்டமிடுவது அவளுக்குத் தெட்டத் தெளிவாக விளங்கியது.

'இது ஏன்ட வாழ்க்க..... இத நான் தான் தீர்மானிக்கோணும்'- பர்ஸானா மெல்ல மெல்லக் கூர்மையடைந்தாள்.

❀❀❀❀❀

ரம்ஜானாவும் அவளது கணவனும் ம.்.ரிபு நகர்ந்த முன்னிரவைக் கிழித்துக் கொண்டு வேக வேகமாக நடந்தனர்.

பர்ஸானாவின் விடயம் தொடர்பான முன்னெடுப்பின் இன்னொரு கட்டம் இது. எப்படியாவது வெற்றிக்கொடி நாட்டிவிட வேண்டுமென்ற பிரயத்தனம்.

உளவு அறிக்கைகளின் படி ஆசிப் இந்த நேரத்தில் வீட்டி லிருப்பானென்று எதிர்பார்த்தனர். ஆனால் இருக்கவில்லை.

அவனது உம்மா உள்ளிட்ட எவருமே இதற்கு விரும்பாததால், இவர்களின் வரவை அவர்களும் விரும்பினர்.

"வாங்கொ வாங்கொ"- ரைஹான் தாத்தா இருவரையும் வரவேற்றாள்.

ரம்ஜானாவின் வாயில் வார்த்தைகள் முட்டி மோதிக் கொண்டு வெளிப்படத் துடித்தன.

"என்னோரு அநியாயமன் ரைஹான் தாத்தா......? அந்த மனிசன் மௌத்தாகி ஆறு மாஸமாகல்லேன். இவளுக்குப் புடிச்சீக்கிய பைத்தியம். ஒங்கட மகனுக்கு நாங்க குத்தம் செல்லியல்ல.... எங்கட வள் அறியோணும்"

"மெய்தான் மெய்தான் நீங்க செல்லியது மெய்தான். எங்களால் ஏன்ட மட்டும் செல்லிய. கேக்கியல்லேன்"- ரைஹான் தாத்தாவும் ஒத்தூதினாள்.

"ம் இந்தக் காலத்துப் புள்ளியள் கூட்டாளியாகிக் கலியாணம் புடிக்கியதான்... இது எங்கியாலுமில்லாத ஜாதி. வெக்கக்கேடு. மூள அவிஞ்சி பெய்த்து"

"ஓ......ஓ....."

இவ்வளவு நேரமும் அமைதியாகவிருந்த அஸ்மிசாபி மெல்ல ஆரம்பித்தார்.

"எங்களுக்கு ரோட்டுக் கெறங்கேல வெக்கம். ம் ரெண்டொரு

வருஷம் போனாப் பொறகு நல்லொரு விஷயம் பாக்கத்தான் நின்ட..... பாவம் உம்ம வாப்பட சொத்து, ஊட்டேம் ரெண்டுக்குப் பிரிச்சி வேறயாக் கெட்டிக் குடுக்கப் பாத்த....."

"இல்லாட்டி...."

மீண்டும் ரம்ஜானா முன்னே பாய்ந்தாள்.

"ஓங்கட மகனக் கண்டு பேசோணுமென்டுதான் இந்த நேரத்தேல வந்த நாங்க...... ம்..... இடிபுழுந்த மாதிரி இந்தச் செய்தியக் கேள்விப் பட்டத்திலீந்த கண்ணுக்குத் தூக்கமில்ல...... ம் நான் சும்ம கேக்கிய... அந்தப் பொடியனுக்கு ஊருலகத்தில பொண்ணில்லாதுக்கா....."

"அதுதானே வேண்டிய மட்டும் பேசிப் பேசி வார.... படிச்சதியள்...... பஸிந்தானதியள் மட்டுமல்ல..... பெரிய பெரிய சல்லிக்கார எடத்தா லேம் வார...... இனி அவனுக்கெட்டேம் ஒரு கொரபாடுமில்லேன்....ம்.... வேண்டிய மட்டும் சம்பாரிக்கிய....."

"அய்தானே... நாங்களெணன்டா புரியமில்ல... இதுக்கு எட முடவாண"-

அதற்கு மேல் கதை பேச அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. விசையூட்டப்பட்ட பொம்மைகள் போல் வெளியே பாய்ந்தனர்.

பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளாமல் வீட்டுக்குள்ளே நின்றவர்கள் வாசலுக்கு வந்து கூடினர். கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தவர்களின் கையில் கத்தியைக் கொடுத்தது போலிருந்தது அவர்களுக்கு!

"பெரியோரு சீரழிவு....ம்.... வரட்டே அவன்"- ரைஹான் தாத்தா பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டாள்.

இதற்கிடையில் வந்து போன சங்கதி எங்கோ இருந்த ஆசிபின் காதுகளையும் எட்டாமலில்லை.

❋❋❋❋❋

எப்பொழுதும் பர்ஸானாவுடனேயே அணைந்து கொண்டிருக்கும் அக்காவின் கடைக்குட்டிக்கு இரவு முழுவதும் காய்ந்து கொண்டி ருந்தது. அவனை மருந்துக்கு அனுப்பாதவரையில் அவளுக்கு நிம்மதியிருக்கவில்லை. அதை விட தாத்தா வெளியே போக வேண்டுமென்பது அவளுக்கு முக்கியம்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காயும் விழவே செய்தது.

"ஹலோ....."

"எப்பிடியன் சொகம்?"

"ம்.... ரெண்டு பக்கமும் நெருப்பு பத்திக் கொண்டீக்கி. நாங்க நடுவில...."

"நீங்க சொல்லியது மெய்தான். ஒங்கட தாத்தா வந்து இங்க பெட்டோல் ஊத்தீட்டுப் பெய்தீக்கா"-

"சரி இப்ப நீங்க எனத்தியன் செல்லிய?"

"நாங்க சீக்கரம் ஒரு முடிவெடுக்கோணும்"

"முடிவ எப்பவோ எடுத்திட்டோம். முடிவெடுத்து மட்டும் போதுமா?"

"சரி நான் சீக்கிரமாச் செல்லியன்"

இப்படித்தான் ஒவ்வொரு நாளும் சொல்வான். முடிவெடுப்பது இலகுவானது. முன்னெடுப்பது கஷ்டமென்பதையே நீண்ட தாமதம் உணர்த்திக் கொண்டிருந்தது.

சிக்கலானதொரு நிலையில் தான் மாட்டிக் கொண்டிருப்பதும் அதிலிருந்து மீட்சி பெறுவது எவ்வளவு கஷ்டமானதென்பதையும் நினைத்துப் பார்க்கும் ஒவ்வொரு கணமும் எல்லாம் விட்டெறிந்து ஒதுங்கி விடுவோமா? என்று கூட பர்ஸானா நினைப்பதுண்டு.

சுயநலமான நெருக்கீடுகளுக்கும் குறுக்கீடுகளுக்கும் மத்தியில் சுயத்தை இழந்து வாழ வேண்டிய பரிதாபத்தையிட்டுக் கலங்கினாள்.

தாத்தா ஆட்டாவில் வந்திறங்கிய போது ஓடிப் போய் சின்னவனைத் தூக்கிக் கொண்டாள். அவன் சோர்ந்து போய்த் தலை கவிழ்த்து நின்ற போதும் வியர்வையால் உடுப்பு முழுவதும் தோய்ந்து போயிருந்தது ஆறுதலாகவிருந்தது.

ரம்ஜானா தங்கையின் முகத்தைப் பார்க்கவுமில்லை. ஒரு வார்த்தை பேசவுமில்லை. முகத்தில் எக்கச்சக்கமாக எள்ளு வெடித்துக் கொண்டிருந்தது.

சின்னவனை கட்டிலில் வைத்து பொத்தான்களை அவிழ்த்து விட்டாள். மின்விசிறியைச் சுழலவிட்டு கூடவே அவனோடு அவளும் கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

❋❋❋❋❋

மச்சானும் தாத்தாவும் ஏதோ சத்தமிட்டுப் பேசிக் கொள்வது அன்று தான் அவளுக்குக் கேட்டது. எந்தச் சந்தர்ப்பத்திலும் மச்சான் அப்படிப் பேசுவது கிடையாது. தாத்தாவென்றால் சொல்லத் தேவையில்லை ஓட்டை வாய்தான்.

அதன் தொடர்ச்சி அவள் தலையில் தான் வந்து விடியுமென்று எதிர்பார்த்தது பிழைத்துப் போகவில்லை.

"என்னடி முடியுமென்டா நிறுத்தச் சொல்லியிருக்கானாமே ஓன்ட அவன்.... ம் அவளவு அகங்காரம் வந்திட்டா? அவனப் போல ஊர் பேர் தெரியாத குடும்பத்தில பொறந்தவரல்ல மச்சான். இன்னும் வரும் இதுக்கு மேலேயும் வரும்...... ம்..... எல்லம் ஒன்னால தான். நீ குடுக்கிய எடம் தான்"

"தாத்தா நீங்கேத்தியன் செல்லிய?" பொறுக்க முடியாத நிலையில் பர்ஸானா வாய் திறந்தாள்.

"அன்டக்கும் இதத்தான் சென்ன...... இன்டக்கும் இதத்தான் செல்லிய.... ஓன்ட நலவுக்குத்தான் செல்லிய.... எங்களுக்கு கரச்சல் தராம இதக் கையுடச் செல்லிய..... கொஞ்சம் காலம் பொகட்டும் நல்லோரு விஷயம் நாங்க பாத்துச் செஞ்சிதார....."

"எனக்கு மாப்பிள தேவப்பட்டில்ல தாத்தா. தானா வந்த விஷயம்.... நீங்களும் விரும்பியொன்டுமென்டு தான் நெனச்ச..... இப்ப நாணொரு முடிவுக்கு வந்திட்டன்."

ரம்ஜானா சற்றே நிதானத்தோடு பார்த்தாள். கோபக்கதிர்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்து விழத் தொடங்கியது. அவளது ராகம் மாறியது.

"ஒனக்கு இப்பவாவது வெளங்கினது போதும். எங்கட உம்ம வாப்பட மரிவாரிய நாங்க வெக்கோணும். இப்பிடி மோசமான நடத்த எங்கட பரம்பரேலே நடந்தில்ல"

"என்ன மன்னிச்சிக் கோங்க தாத்தா"

"ஒனக்குத் தெரீமோ தெரிய..... கானானூட்டு கைரி தாத்தா, கலியாண முடிச்சி மூனு வருஷத்தில அந்த மனிசன் மௌத்தாப் போன. எவளவு செல்லீம் அவ கேக்கல....... ஒரு புள்ளயோட

அவ பேச்சிக் கேக்காம வாழ்ந்த தானே..... ம்..... ஜெமியப்பட மகள்ட மாப்பிள மூனு மாஸதேல காருக்கு முட்டி அவடத்திலே மௌத்து. அநத பொம்புள மௌத்தாகங்காட்டீம் அதே இருப்பில இருந்த. ஒரு கலியாணம்- கந்திருட்டுக்குப் பொகல்ல..... வெள்ளப் பொடவயல்லாம உடுக்கல்ல. ம்..... இப்பிடி இன்னம் எத்தினயென்டு செல்லவன். யோசிச்சிப் பாரே புள்ள"

"நான் முடிவெடுத்திட்டன் தாத்தா"- என்றவாறு பர்ஸானா தலைவாரிச் சிக்கவிழ்க்கத் தொடங்கினாள்.

நீண்ட காலப் போராட்டத்திற்கு நல்ல முடிவு கிடைத்துவிட்ட மகிழ்ச்சி ரம்ஜானாவைக் குதூகலப்படுத்தியது. ஓடோடிப் போய் சூடாகியிருந்த மச்சானுக்கும் ஐஸ் வைத்தாள்.

அன்று தான் அவர்கள் இருவரும் நிம்மதியாக நித்திரை செய்தார்கள்.

❀❀❀❀❀

அதிகாலைச் சூரியன் ஊரெல்லாம் புதுச் செய்தி பரப்பிக் கொண்டு துயிலெழுந்தது.

ஒரு சில நண்பர்கள் உறவினர்களோடு அடுத்த மஹல்லாவுக்குச் சென்று ஆசிபும் பர்ஸானாவும் நிகாஹ் முடித்திருந்தனர்.

கொஞ்சக் காலம் வெளியூரிலேயே தங்குவதற்காக வாடகைக்கு வீடு எடுத்திருப்பதாகவும் கேள்வி.

# ஓய்வூதியம்

முப்பத்தேழு வருட ஆசிரிய சேவைக்குப்பின் மஸ்னவி மாஸ்டர் ஓய்வுபெற்றிருந்தார். எல்லோரையும் போல மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் அவருக்கும் இல்லாமலில்லை. நாளெண்ணி நாளெண்ணி இன்று அந்தநாள் வந்துவிட்டதை தபாற்காரன் உறுதிப்படுத்தினான். ஆம், பென்ஷன் கொடுப்பனவுகள் சம்பந்தமான கடிதம் வந்திருந்தது.

ஐந்து லட்சத்தி அறுபத்தாறாயிரத்தி முன்னூற்றி இருபத்தேழு ரூபாய் என்றால் லேசான தொகையா? ஓர் ஆசிரியரைப் பொறுத்தமட்டில் பெரிய தொகைதான். மாதாந்தப் பென்ஷன் சம்பளத்திற்கு மேலதிகமாக இத்தொகை.

"ஜைனபு காயிதம் வந்தீக்கி"- என்றவாறு மனைவியின் முகத்தில் மகிழ்ச்சிப் பூங்காவொன்றையே மலரவைக்க நாடினார்.

❋❋❋❋❋

மஸ்னவி மாஸ்டருக்கு இரண்டேயிரண்டு பிள்ளைகள். மூத்தவள் மஸீஹா ஏஎல் சித்தியடைந்துவிட்டு வேறு ஏதேதோ படித்துக் கொண்டிருந்தாள். இளையவன் இர்ஷாதும் இம்முறை ஏஎல் போதுமான இஸட் புள்ளிகளோடு சித்திபெற்றிருந்தான்.

"இந்தாங்க தம்பிலித்தண்ணி" மனைவியின் வருகை.

இப்பொழுதெல்லாம் மாஸ்டருக்கு நல்ல கவனிப்பு. அவரைக் கல்யாணம் செய்து முப்பது வருடம் வாழ்ந்ததன் பலாபலன் இப்போதுதான் கிட்டியிருந்தது.

"இந்தக் காயிதத்த எடுத்துக்கொணு போனா சல்லிய அப்படியே கைல தந்திருவாங்களா....?" மாஸ்டரின் மனைவியென்றாலும் படிப்பு கொஞ்சம் மட்டந்தான் என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்துக்கொண்டாள்.

"இல்ல ஜைனபு. எங்கட எகவுண்டில போடுவாங்க. நாங்க பேங்கிக்கு பெய்த்து எடுக்கேலும்"- அவர் நடைமுறையை விளங்கவைத்தார்.

"இல்ல. கைல ஈக்கிய நேரம் மகள்ட விஷயத்த பாத்து முடிச்சிப்போட்டா நல்லமேன்...."

"மெய்தான் மெய்தான்..... அவளுக்கு இப்பதானே இருவது வருஷம்.... ம்.... படிப்பேம் கொழப்பப்படாது..."

"இங்க பாருங்கொ பாரத்தால லேசாகிக் கொளப் பாக்கோம்.... படிக்கியத்த வேண்டியமாதிரி படிக்கட்டு. இப்ப கல்யாணம் புடிச்சி புள்ளகுட்டியாகிக் கொண்டும் படிக்கியதானே...."

"ம்.... அதுபோல மாப்பிளேம் கெடக்கோணுமேன்.... அவசரப்பட்டு பாழ் கெணத்தில தள்ளேலுமா புள்ளயள...."

"ஊட்டில பூந்துக்கொண்டு நின்டத்துக்கு மாப்பிள வாரல்ல.... நாலு மனிசரோட செல்லோணும்.... அப்பதான் வாய்க்குவாய் போற...."

கைக்குவரும் பணம் கண்ணுக்குத் தெரியாமல் கரைந்து போய்விடும் அனுபவம் அவளை இப்படியெல்லாம் பேசவைத்தது. மனைவியின் வார்த்தைகளிலுள்ள உண்மை அவருக்கு விளங்காததல்ல. உண்மையில் அவருக்கு முன்னாலுள்ள மிகப்பெரிய பொறுப்பும் அதுதான்.

❁❁❁❁❁

காலைவேளை. சுபஹு" தொழுதுவிட்டு பத்திரிகை படித்துக்கொண்டிருந்தவர் தற்செயலாகக் கண்களை மேலுயர்த்தியபோது அவர் கண்ட காட்சி மனதில் சோகத்தை வருவித்தது.

ஆங்காங்கேயிருந்து வெளிப்பட்டு மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பழைய நினைவுகள், படிப்பித்த பாடசாலைகள், கற்பித்தல் அனுபவங்கள் போட்டிபோட்டுக் கொண்டு வெளிப்படலாயின.

அதனை அதிகபட்சம் மேலோங்க இடமளிக்காமல் அம்ஜத் மச்சான் கடவையைத் தாண்டி உள்ளே வந்துகொண்டிருந்தார். பத்திரிகையை மடித்துவைத்து அவரோடு கதைக்கத் தயாரான போது அவர் எங்கே போனாரென்று தெரியவில்லை. ஆனால் முன்வாசலுக்கு ஏறவில்லையென்பது மாத்திரம் அவருக்குறுதி.

பின்பக்கமாகப் போய்விட்டாரோ என்று பார்க்க முற்றத்துக் கிறங்கியபோது அவர் பின்பக்கமிருந்து கூரையைப் பார்த்தபடி வந்து கொண்டிருந்தார்.

"எனத்தியின் மசான்.... ஊட்டச்சுத்திப் பாக்கிய? அந்தக் காலத்தில ஒங்கட வாப்பா கட்டினது ஒரு மாத்தமுமில்லாம அப்பிடியே ஈக்கி" என்றவாறு மஸ்னவி மாஸ்டர் சிரித்தார்.

"அதத்தான் நானும் செல்லப்பாத்த. ம்.... மகளட விஷயமும் முன்னுக்கு வார.... ஊடு வாசல கொஞ்சம் சருக்கட்டிக் கொளோணும் மச்சான். பொண் பாக்க வாரென்று சென்னத்துக்கு ஊட்டேம் சேத்தித்தான் பாக்கிய"

"செய்தத்துக்கென்டா ஒரு கொட வேலீக்கி...."

"ஓ..... இப்ப ஊட்டிலதானே நிக்கிய. ஒன்டொன்டா பாத்துப் பாத்துச் செய்ங்கொ. முன்னால ஹுட்டொன்டு அடிக்கோணும்.... பின்னால குசுனித்துண்டொன்டு எடுத்து பாத்ரூமும் கெட்டிக் கொளோணும்"

"இந்தக் காலத்தில கல்லுமண்ணெட வெலக்கி கெட்டுக்கெட்டா சல்லி வெச்சிக்கொண்டுதான் கைவெக்கோணும்"

"செய்யோண்ய வேலய எப்பிடீம் செய்யோணும். சல்லியப் பாக்கேல.... அல்லா ஒதவி செய்வான்"- வேலயும் நடக்கவேணும் தன்னாலும் உதவ முடியாதென்பதை மெல்ல வெளிப்படுத்திக் கொண்டார்.

"ஆ.... எனத்தியனிது.... பேச்சிக் கொரல் கேட்டத்துக்கு வந்த பாக்க.... மச்சனும் மச்சனும் எனத்தியோ தெரிய கத...." என்றவாறு குசினிப்பக்கமிருந்து ஜைனபு தோன்றினாள்.

"மச்சன் ஊட்டு வேல தொடங்கப்போறாம்"

"அல்ஹம்துலில்லா செய்யோணும்தானே.... அவனவன்ட வேலய வேற தாராலும் செஞ்சிதரப் போறா....." கூடவே அவளும் ஐஸ் வைத்தாள். "நில்லுங்கொ கசட்ட கொஞ்சம் ஊத்துக்கொணு வாரன்"- அவளுக்கும் உற்சாகம் பிறக்காதா என்ன?

பென்ஷன் பணத்தை மகளின் கல்யாணம், வீடு திருத்தம் இந்த இரண்டுக்கும் எப்படிப் பிரித்துக் கொள்வதென்ற சிந்தனை மாஸ்டருக்கு

❁❁❁❁❁

இர்ஷாதுக்கு பல்கலைக்கழகம் புகுந்து காலத்தைக் கடத்துவதெல்லாம் பொருத்தமாகப்படவில்லை. சின்ன வயதாகவிருந்தாலும் அவனுக்குப் பெரிய மூளை. ஏதாவதொரு கோஸ் செய்துவிட்டு வெளிநாட்டுக்கு ஓடிவிடவேண்டுமென்று துடியாய்த் துடித்தான்.

"வாப்பா நல்லோரு கோஸ் நான் செலக்ட் பண்ணீட்டன். ஸீமா என்டு நீங்க கேள்விபட்டீக்கும். அப்பிடி புதியகோஸ் மூனுவருஷம்.... பாட்வன் பாஸானாலும் ஜொப்பீக்கி....."

மஸ்னவி மாஸ்டருக்கு அதுபற்றியெல்லாம் பெரிதாக ஒன்றும்

தெரியாது. ஓஎல் ஏஎல் அதுக்கு மேல யூனிவஸிடி இவ்வளதான். டெக்னிகல் கொலேஜ்..... இப்பிடியும் லேசாகக் கேள்விப்பட்டிருக்கிறார்.

"மகன் தெரிஞ்சவங்களுக்கிட்ட கேட்டுப் பாத்துக்கோ..... செலவைப் பத்தீம் சென்னாத்தானே எனக்கு யோசின பண்ணேலும்....."

"ஓ வாப்பா.... சாடட் செஞ்சிக்கொண்டீக்கிய எங்கட இக்பால்ட நானாதான் காட்டித்தந்த. இக்பாலும் அதுதான் செய்யப்போற. ஒரு வருஷத்தில பாட்வன் எக்ஸாம்.... ரெஜிஸ்டேசன் கோஸ்பீஸ் எல்லம் அறுவதாயிரம்.... முழுக்கோஸேம் முடிக்க ஆறுலட்சம் போற.... ஆனா ஒரேயடியா கெட்டத் தேவில்ல"

அவன் படபடவென்று சொல்லிக் கொண்டு சென்றான். எல்லாம் தெளிவாகச் சொன்னதிலிருந்தே அவன் அதில் மனம் வைத்துள்ளது வெளிப்பட்டது.

"சரி மகன் எனக்கு வெளங்கின. யோசின பண்ணிச் செல்லியனே..."

அவரது ஒரே நம்பிக்கை மகன்தான். அவனை ஒரு படிப்பாளியா கவும் அதேநேரத்தில் ஒரு வருமானதாரியாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு அவருக்குள் நிலைபெற்றிருந்தது.

❁❁❁❁❁

ஒரு குட்டிச் செல்வந்தரைப் பார்ப்பதுபோல் தான் தன்னை எல்லோரும் பார்ப்பதாக மஸ்னவி மாஸ்டர் உணர்ந்தார்.

அரச ஊழியர்கள் பென்ஷன் எடுத்தால் அவர்களுக்குப் பெருந்தொகைப் பணம் கிடைப்பதாக இப்பொழுதுதெல்லாம் எல்லோருமே அறிந்துவைத்துள்ளார்கள்.

"சம்பளம் குடுத்தது போதாததுக்கு என்னத்துக்கன் இதமட்டடெல்லாம் குடுக்கிய." என்று காழ்ப்புணர்ச்சியோடு கருத்துத் தெரிவிப்பவர்களும் இருந்தனர்.

எது எப்படிப் போனாலும் தன்னிடம் யாரும் கடன் கேட்டு வந்துவிடக்கூடாதென்பதே மாஸ்டரின் ஒரே பிரார்த்தனை. அதனால் வெளியில் அதிகம் நடமாடுவதில்லை. வீட்டிலும் கூட பின்பக்கமாகத்தான் எல்லா வேலைவெட்டிகளும்.

கொம்பியூடட் பென்ஷன் வரப்போய் அவருக்கு இருந்த நிம்மதியும் இல்லாமல்போன நிலைதான். மகளின் திருமணம், வீடு திருத்தம், மகனின் கல்வி இந்த மூன்றிலும் எதுவுமே முக்கியமற்றதாக அவருக்குத் தெரியவில்லை. முழுமையாகப் பார்த்தால் கிடைத்துள்ள தொகை ஒன்றுக்குக்கூட போதாது. இதை எப்படிப் பகிர்ந்தளிப்பததென்பதில்தான் அவரது சிந்தனையெல்லாம் குவிந்து போயிருந்தது.

❁❁❁❁❁

ஸலாம் சொன்னபடி வந்தது வேறுயாருமல்ல மாலிக் மௌலவிதான்.

"வாங்க வாங்க" என்று வரவேற்ற மஸ்னவி மாஸ்டர் இருக்கைகளை ஒழுங்குபடுத்தினார்.

நீளநீளமான வெள்ளை உடுப்புக்களோடு அத்தர் மணக்கும் புன்னகையோடு அமர்ந்து அங்குமிங்கும் பார்த்தார்.

"இன்டக்கித்தான் எங்கடூட்டுப் பொகத்துக்கு வந்தீக்கிபோல......"

"ஓ.... ஸேர் ஓங்கடூட்டில ஒரு விஷயமும் நடக்கல்லே அப்பிடி வாரத்துக்கு...."

என்ன சொல்லவந்துள்ளார் என்பதை அறியும் ஆவல் பிரவகித்தாலும், அவருக்குள் ஒரு ஊகமும் ஏற்படாமலில்லை.

"அந்தக் காலத்தப் போலயா இப்ப..... வருஷத்துக்கு ரெணுமூணு மாஸ்டர்மார் ஹஜ்ஜ"க்குப் போறாங்க. அல்ஹம்துலில்லா.... அந்தப் பாக்கியம் ஓங்களுக்கும் கெடக்கோணும் ஸேர்..... அத நெனவூட்டியது எங்கட கடம.....

இல்லாட்டி நாங்களும் பாவத்தாளி......" மிகமிக உணர்ச்சிபூர்வமாக மௌலவி சொன்னார்.

ஏதோவொரு ஹஜ்- உம்ரா டிரவல் ஏஜென்ஸியின் விளம்பரத்தில் மாலிக் மௌலவியின் பெயரும் சப்ஏஜென்டாக அடிக்கடி பேப்பரில வருவது மஸ்னவி மாஸ்டருக்கு ஞாபகம் வந்தது.

"ஓ மௌலவி கடமயானா கட்டாயம் பொகத்தானே வேணும்.... எனக்கும் கலியாணப் பிரச்சின.... ஊட்டுப் பிரச்சின..... படிப்புப் பிரச்சின..... இப்பிடி....."

"ஓஓ.... நான் இல்லயென்டல்ல... எல்லாப் பிரச்சினேம் மனிசனுக்கீக்கி.... நீங்க ஒன்டும் யோசிக்கவாண..... தயாராகுங்கொ.... ஒன்டுக்கு பத்தா அல்லாதருவான்.... அப்பிடி கொறநெறவென்டா உம்ராவுக்குச் சரி பெய்த்திட்டுவர நிய்யத்து வெய்ங்கோ..... நாயகமாங்க நடந்து திரிஞ்ச மண்ண கண்ணால காணியது பெரிய பாக்கியம். அல்லா லேசாக்குவான்.... யோசின பண்ணுங்கொ.... ரெணுமூணு நாள்ல நான் மறுபேணம் வாரன்" என்றவாறே மாலிக் மௌலவி எழுந்தார்.

விடைகொடுத்து, அவர் கடவையைத் தாண்டும் வரை பார்த்துக் கொண்டிருந்த மஸ்னவி மாஸ்டர் தனக்குள் சிரித்துக் கொண்டார்..

**மேற்பார்வையும் வழிகாட்டலும்**

*விஜித் கனுகல*
கலாசார அலுவல்கள் பணிப்பாளர்

*கே.டீ. காரியகரவண*
கணக்காளர்

*ஸ்ரீமதீ செனவிரத்ன*
நிர்வாக அதிகாரி

*டட்லி ராஜபக்ஷ*
பிரதி உதவியாளர்

**திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டி செயற்திட்ட இணைப்பாளர்**

*எம்.எல்.சுரங்க நயனஜீத்*
அபிவிருத்தி அதிகாரி

**அச்சு ஒருங்கிணைப்பாளர்**

*நிஷ்ஷங்க விமலவீர*
முகாமைத்துவ உதவியாளர்

**அச்சகம்**

நெழும் பிரின்டர்ஸ்
ராகம.




கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி, செத்திரிபாய,
பத்தரமுல்ல

ISBN978-955-0353-38-5
9789550353385